Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2029 தை 9 வியாழக்கிழமை (22-01-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 48

## ஊரடங்கு நேரம் நடமாடிய மூவர் சூட்டுக்கு பலியாகினர்!

### தாவடி, நவாலிப் பகுதிகளில் செவ்வாய் இரவு சம்பவம்

குடாநாட்டில் நேற்று முன்தினமிரவு இருவேறு இடங்களில் ஊரடங்கு வேளையில் நடமாடியதாகக் கூறப்படுவோர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் உயிரிழந்தனர்.

தாவடிப் பகுதியில் இரவு 10-30 மணியளவில் ரோந்தில் ஈடுபட்ட படையினரால் சைக்கிளில் வீதியைக் கடக்க முயன்ற இருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் —

அதில் இருவர் உயிரிழந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

அந்த இருவரில் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

அதே இடத்தில் உயிரிழந்த மற்றவரின் சடலம் நேற்று மாலை படையினரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இவர்கள் சுடப்பட்ட இடத்தில் கத்தி, கோடரி, கம்பி, ரோர்ச் லைட் ஆகியவை கண்டெடுக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நவாலிப் பகுதியில் அன்றைய தினம் இரவு 12.40 மணியளவில் நடமாடிய ஒருவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகவும் —

அவரின் சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று ஒப்படைக்கப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3-9-100-ரி)

## நாடு முழுவதும் மின் விநியோகம் தடைப்பட்டது

நேற்று பிற்பகல் 2-35 முதல் 3-0 வரை நாடு பூராவும் திடீரென மின்சார விநியோகம் தடைப்பட்டது.

இதனால் பரபரப்பு நிலவிய போதும், விக்ரோறியா மின் நிலையத்தில் ஏற்பட்ட சிறு கோளாறே இதற்கு காரணம் எனப் பின்னர் தெரிவிக்கப்பட்டது. (இ-21-3)

# புதிய படைப் பிரிவு விரைவில் உருவாகும்

## கொழும்பையும் கட்டுநாயக்காவையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு, ஜனவரி 22

தலைநகர் கொழும்பையும், கட்டுநாயக்கா விமானநிலையத்தையும் பாதுகாக்கப் புதிய படைப்பிரிவு ஒன்று உருவாக்கப்படவிருப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

விமானப் படையினருடன் இணைந்து இந்த விசேட படைப்பிரிவு செயற்படும்.

இந்தப் படைப்பிரிவுக்குக் கொழும்பு, கட்டுநாயக்கா பிரிவுகளில் உள்ள பிரதேச செயலகங்களில் இருந்து 50 பேர் வீதம் சேர்க்கப்படவிருப்பதாகவும்

அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் ஆள்கள் தெரிவு செய்யப்படுவர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந்தப் படைப்பிரிவினர் யுத்தமுனைக்கு அனுப்பப்படமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-21-3)

## வாழைச்சேனைப் பகுதியில் கிராமங்கள் சுற்றி வளைப்பு

### 100 க்கும் மேற்பட்டோர் கைது!

மட்டக்களப்பு, ஜன. 22

வாழைச்சேனையில் ஐந்து கிராமங்கள் நேற்று அதிகாலை முதல் சுற்றிவளைக்கப்பட்டு 100 க்கும் மேற்பட்டோர் மேல் விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்தே தேடுதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கண்ணகி கிராமம், கண்ணகிபுரம், பேய்த்தாளை, விநாயகபுரம், புதுக்குடியிருப்பு ஆகிய கிராமங்களை சுற்றிவளைத்த படையினர் பொதுமக்களை பொது இடங்களில் கூடுமாறு அறிவித்து, வீடுகளில் தேடுதல் நடத்தினர்.

தேடுதலின் பின்னர் தடுத்து வைக்கப்பட்ட 100க்கும் மேற்பட்டவர்கள் நேற்று மாலை 5 மணியளவில் விடுவிக்கப்பட்டதாகத் தகவல் ஒன்று தெரிவித்தது. (இ-21-3)

## வவுனியாவில் சுற்றிவளைப்பு

வவுனியா மாவட்டத்தில் ராஜேந்திரன்குளம் பகுதி திடீரென நேற்று முன்தினம் 3 மணியளவில் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு 11 பேர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அன்று இரவு 11-30 மணியளவில் மற்றுமொரு பகுதியில் 3 பெண்கள் உட்படப் பலர் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா மாவட்டத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் கைதுகள் தீவிரமாகியுள்ளதால் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கைதுகள் குறித்து ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பினருக்கும், செஞ்சிலுவைச் சங்க வவுனியா கிளைத்தலைவர் சிவநாதன் கிஷோருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-3)

## கைகலப்பில் 3 பொலீஸார் காயம்

நேற்று கோப்பாயில் இராணுவத்தினருக்கும் பொலீஸாருக்கும் இடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் கைகலப்பில் படுகாயமடைந்ததாக மூன்று பொலீஸார் யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்படுள்ளனர்.

சோமதாஸ குமார (வயது 20), சந்திரராஜ புஷ்ப குமார (வயது 21), குணதிலக புலகுமர (வயது 20) ஆகிய மூவருமே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-9)

### அச்சுவேலி தெற்குச் சம்பவம்:

## இறுதிக்கிரியைகளை நடத்துவதற்கு உடற்பாகங்களைத் தரக்கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 22

அச்சுவேலி தெற்கு வாதரவத்தைப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் கொலையுண்ட சரஸ்வதி சௌந்தரராஜன், செல்வரட்ணம் ஜெயசீலன் ஆகியோரின் இறுதிக் கிரியைகளை அவர்களது உறவினர்கள் மேற்கொள்ள வசதியாக இறந்தவர்களின் உடல் பாகங்களை வழங்க ஏற்பாடு செய்யுமாறு வடமாகாண இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவிடம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கோரியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக இராணுவத் தளபதியுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து பிரிகேடியர் றொக்லூட் மூலம்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு நகருக்குள் குண்டுடன் மோட்டார் சைக்கிள்

### பொலீஸார் தேடுதல் நடத்துகின்றனர்

மட்டக்களப்பு நகரில் மோட்டார் சைக்கிள்களை படையினர் துருவித் துருவி சோதனை செய்கிறார்கள்.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் குண்டு பொருத்தப்பட்டு அந்த மோட்டார் சைக்கிள் நகருக்குள் எடுத்து வரப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்தே இச்சோதனை இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-21-3)

## அதிரடிப்படையினர் - புலிகள் திருக்கோயிலில் மோதல்!

மட்டக்களப்பு, ஜன. 22

மட்டக்களப்பு திருக்கோயில் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் விசேட அதிரடிப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றது.

இம்மோதலில் விடுதலைப் புலிகளின் பிரதேச தலைவர் துரை உயிரிழந்ததாகவும் —

அவரிடம் இருந்து ரி 56 ரக துப்பாக்கி ஒன்றும், கிரனேட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விடுவிக்கப்பட்ட 11 இளைஞர் கப்பலில் யாழ். வந்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 22

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறை வந்து சேர்ந்த 'லங்கா முடித்த' கப்பலில் அனுராதபுரம் முதலிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 11 இளைஞர்கள் யாழ். வந்து சேர்ந்தனர்.

அவர்களது பெயர் விவரங்கள் வருமாறு:-

★ ராகுலன் — கச்சாய் றோட், சாவகச்சேரி
★ விஜிரேன் — கைதடி வடக்கு, கைதடி
★ நியூட்டன் — அம்மாவீதி, மானிப்பாய்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்டியில் பாடசாலைகள் மூடப்படுகின்றன

எதிர்வரும் 4 ஆம் திகதி கண்டியில் நடைபெறவிருக்கும் சுதந்திர பொன்விழாவை யொட்டி கண்டி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் [illegible] முதல் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-21-3)

## தமது காவலில் உள்ள சிப்பாயை விடுவிப்பதற்கு புலிகள் முடிவு

மட்டக்களப்பு மாவட்டம் மாவடி வேம்பு முகாமில் இருந்து கடந்த வருடம் நவம்பர் மாதம் 31 ஆம் திகதி தப்பி ஓடி விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டுள்ள இராணுவச் சிப்பாய் ஒருவரை நல்லெண்ண அடிப்படையில் இன்று அல்லது நாளை விடுதலைப்புலிகள் விடுவிக்கவுள்ளனர்.

மேற்கண்ட தகவலை விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் எல். கீரன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு அறிவித்துள்ளார்.

அண்மையில் மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளைச் சந்தித்து நீதிக்கும், சமாதானத்துக்குமான ஐக்கிய அமைப்பின் இலங்கைக் கிளைச் செயலாளர் பாசல பண்டாரவின் நல்லெண்ண விஜயத்தை வரவேற்றே விடுதலைப்புலிகள் அந்தச் சிப்பாயை விடுவிக்கவிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-21-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## குமாரவேலு பரராஜசேகரம்

சரசாலையைச் சேர்ந்த குமாரவேலு பரராஜசேகரம் (இளைஞர்சேவை அதிகாரி) காலமானார்.

இவர் காலஞ் சென்ற திரு. திருமதி குமாரவேலு (ஆசிரியர்) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற ப.கமலாவதியின் அன்புக்கணவரும், அம்பிகா, கௌசிகன், ஔவை, கமலபரன் ஆகியோரின் பாச மிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 22--1-98 பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சரசாலை ஆவடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
ந. சிவபாலன்

அம்பிகா மருந்துச்சாலை
சாவகச்சேரி.
(52795)

## செல்லத்துரை பஞ்சலிங்கம்

சுண்டிக்குளி பிளெச்சர் வீதியைப் பிறப்பிடமாகவும், ''அன்னவாசம்'' கோண்டாவில் மேற்கில் வசித்தவரும், தற்சமயம் ஜேர்மனியில் வசித்தவருமாகிய செல்லத்துரை பஞ்சலிங்கம் 17-1-98 இல் ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை—ருக்மணி தம்பதிகளின் அன்பு மகனும், சுப்பிரமணியம்—அன்னலட்சுமி (மகனி) தம்பதிகளின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும், சேளினி, கேகினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-1-98) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சந்திரசேகரம்பிள்ளை
(சகலன்)

சந்திரோதயம்,
கோண்டாவில் மேற்கு.
(49917)

## கதிரேசு பொன்னுத்துரை

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)
நயினாதீவு.

நயினாதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கதிரேசு பொன்னுத்துரை 21-01-98 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற கதிரேசு — செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சதாசிவம் — கனகம்மா தம்பதிகளின் அருமை மருமகனும், மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், அன்பழகன் (கிராமசேவகர் - அனலைதீவு), மாலினி, பிரியதர்ஷினி (யாழ். பல்கலைக்கழகம், 3 ஆம் வருடம்) அன்பரசன், யசோதினி ஆகியோரின் அன்புத் தந்தையாருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21-01-98 ஆம் திகதி மாலை நயினாதீவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. அன்பழகன் (மகன்)
(கிராம சேவையாளர்)

4ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(52789)

## சுப்பிரமணியம் இராசரத்தினம்

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர் சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள் 20-01-1998 இல் காலமானார்.

இவர் ஞானப்பூங்கோதையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாலேந்திரன், குணேந்திரன் (சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்), நந்தினி (ஜேர்மனி), சுகந்தினி (கனடா), ஜெயந்தினி (ஜேர்மனி), சாந்தினி (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருஞானசோதி (சமூக அபிவிருத்தி மன்றம்), ரவீந்திரன் (ஜேர்மனி), சந்திரா (கனடா), ஜீவராசா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், சிவரூபன் (கொக்குவில், இந்துக்கல்லூரி), யதுபாலன், நிருபா, கார்த்திகா, காஞ்சனா, லக்சனா, சிரோன், யதுசனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான இராசையா, சோதி, ஆனந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 20-01-1998 அன்று பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மு. சிவலிங்கம்

உரிமையாளர்
சிவகாமி அம்மன் கோயில்,
இணுவில்.
(52799)

## பரிசளிப்பு விழா

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வலி. தென் மேற்கு பிரதேசசபை மானிப்பாய் கலையரங்கில் நடைபெறவிருக்கின்றது.

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் றெ. இருதயநாதன் பிரதம விருந்தினராகவும், சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-3)

## மயிலணியில் மிதிவெடி

விறகு பொறுக்கச் சென்ற சமயம் மிதிவெடியில் சிக்கிய ஒருவர் தனது வலது காலை இழந்தார்.

இச் சம்பவம் சுன்னாகம் மயிலணிப் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

காசி தியாகராஜா (வயது 47) என்பவரே மிதிவெடியில் சிக்கியவர் ஆவார். (இ-9)

## கொழும்பில் அரச அதிபர்கள் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜன. 22

கொழும்பில் இன்று வியாழன் நடைபெறுகின்ற அரச அதிபர்கள், பிரதேச செயலர்களுக்கான விசேட செயலமர்வில் கலந்து கொள்வதற்காக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனும் மற்றும் 12 பிரதேச செயலர்களும் நேற்று முன்தினம் கொழும்பு பயணமானார்கள். (இ-7)

## மாணவர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன. 22

குளியாப்பிட்டியிலுள்ள சாராநாத் வித்தியாலயத்தில் கடந்த திங்களன்று மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் காரணமாக இம்மாதம் 26ஆம் திகதிவரை அந்த வித்தியாலயத்தை மூடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த முடிவின்படி கடந்த செவ்வாயன்று பகல் 10.00 மணியுடன் வித்தியாலயம் மூடப்பட்டு மாணவர்கள் அனைவரும் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

அந்தப் பாடசாலையில் மோசமாகப் பணியாற்றிய ஆசிரியர்கள் நால்வரை இடமாற்றஞ் செய்யுமாறு அதிபர் கல்விப் பணிமனைக்கு சிபார்சு செய்ததே மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கூக்குரலிட்டு வெடி கொளுத்தி, கூழ் முட்டை அடித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)


லிபேட்டி சினிமா
அச்சுவேலி

30 அடி அகலத் திரையில்

சிவாஜிகணேசன்
வாணி ஸ்ரீ
நடித்த

வசந்த மாளிகை

பழையநேரம்:
9-30, 12-30, 3-30,

(52705)


# மரண அறிவித்தல்கள்

## சதாசிவம் செல்லையா

தெல்லிப்பழை மாத்தனை, துர்க்காபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சதாசிவம் செல்லையா நேற்று 21-1-98 இல் காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும், கந்தையாவின் (சிங்கப்பூர் கந்தையா) அன்புச் சகோதரரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 35, செட்டித்தெரு, நல்லூரில் அவரது சகோதரன் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக இன்று (22-1-98) வியாழக்கிழமை பகல் 1 மணியளவில் பூதவுடல் சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. கதிர்காமநாதன்
(மகன்)

[52798]

## திருமதி பொன்னம்மா நல்லதம்பி

கோயிலாகண்டி மத்தியைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா நல்லதம்பி காலமானார்.

இவர் காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும், திருமதி இரத்தினேஸ்வரி, பாலச்சந்திரன், பத்மாவதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-1-98) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
கா. இராமலிங்கம்

கோயிலாகண்டி,
மறவன்புலோ.
52802)

## இராசையா அன்ரன் இரத்தினசிங்கம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கொழும்பைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர் இரத்தினசிங்கம் 18-01-98 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் நவரஞ்சிதமலரின் (இளைப்பாறிய ஆசிரியை, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) அன்புக் கணவரும், ஜெயராஜசிங்கம் (U K), தேவராஜசிங்கம் (பிரான்ஸ்), ஜெயவதி (ஜேர்மனி), ஜீவராஜசிங்கம் (U K), தயாவதி (U. K), மனோராஜசிங்கம் (U K.), கலாவதி (வேம்படி மகளிர் கல்லூரி, விஞ்ஞானபிரிவு A/L 97) ஆகியோரின் அன்புத் தந்தையும், மடோனா, மரியா, ராஜேந்திரா, மகேஸ்வரி, ரனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (22-01-98) 4 மணிக்கு பொரளை கனத்தை சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
S.S. தேவசகாயம்

இல. 28, றக்கா ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(52800)

## பொன்னம்பலம் உமாகாந்தன்

வைமன் றோட்டைப் பிறப்பிடமாகவும், 40/4, கோவில் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் உமாகாந்தன் 21-1-98 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவரான திரு. சி. பொன்னம்பலம் (O. A. கச்சேரி, யாழ்ப்பாணம்) - காலஞ்சென்ற திருமதி பொன்னம்பலம் தம்பதிகளின் ஏகபுத்திரனும், திருமதி இந்திரலோஜினி உமாகாந்தன் (ஆசிரியை J/ கனகரட்ணம் M M V) அவர்களின் அன்புக் கணவரும், திருக்குமரன், ஐங்கரன் (யா/ பரியோவான் கல்லூரி), உமையாள், கௌதமி (யா/ புனித பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற திருமதி வசந்தி அமிர்தநாதன் அவர்களின் அன்புச் சகோதரனும், திரு. திருமதி திருநாவுக்கரசு (ஓய்வு பெற்ற உப அதிபர்கள்) அவர்களின் மருமகனும், Dr ஈஸ்வரகாந்தன் (University of Nancy France), திருமதி லக்ஷ்மிகாந்தி கண்ணுத்துரை (ஆசிரியை St. James M.V), திரு. கதிர்காமநாதன் (ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி), காலஞ்சென்ற அமிர்தநாதன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-1-98) வியாழக்கிழமை 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொழும்புத்துறை துண்டிமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி இ. உமாகாந்தன்
(மனைவி)

40/4, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
(52792)


யாழ்ப்பாணம் மாநகரசபைத் தேர்தல்
வலி- வடக்கு பிரதேச சபைத் தேர்தல்
1998-01-29

தமிழர் விடுதலைக் கூட்டணி X

எமைப் பிடித்துள்ள இருளகன்று பொழுது புலர உங்கள் வாக்குகளை உதயசூரியனுக்கு அளியுங்கள்!
(67667)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சோளம் விலை உயர்வை எதிர்த்து

# ஹராரேயில் கலவரம்

# இராணுவம் குவிப்பு!

ஹராரே, ஜனவரி 22

அடிப்படை உணவுப் பொருளான சோளத்தின் விலையை அதிகரிக்க அரசு முடிவு செய்ததை அடுத்து சிம்பாப்வே தலைநகர் ஹராரேயில் பெரும் கலவரங்கள் வெடித்துள்ளன.

கலவரக்காரர்களை அடக்க அரசு இராணுவத்துக்கு உத்தரவிட்டிருப்பதை அடுத்து நகரில் பெரும் எண்ணிக்கையான துருப்புக்கள் குவிக்கப்பட்டுள்ளன.

ஹராரேயில் கறுப்பர்கள் வாழும் பகுதிகளில் சூறையாடல், சொத்துக்கள் அழிப்பு போன்ற சம்பவங்கள் பரவலாக இடம்பெற்றுள்ளன. இத்தகைய சம்பவங்கள் கட்டுக்கடாங்காது போனதால் இராணுவத்தை அனுப்ப முடிவு செய்ததாக உள்துறை அமைச்சர் டிமிஸோ டமின்கா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

வன்முறையாளர்களை கண்ட இடத்தில் சுட இராணுவத்துக்கு உத்தர விடப்பட்டிருப்பதாகவும் —

கலவரங்களை அடக்க தேவையான ஆயுதங்கள், வெடி மருந்துகள் என்பன படையினருக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பொலீஸாருக்கு உதவியாக அனுப்பப்பட்டிருக்கும் இராணுவத்தினரைவிட மேலும் 40 ஆயிரம் துருப்புக்களும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்செயல்களால் இதுவரை ஏற்பட்ட ஆள் சேதம், சொத்து இழப்பு தொடர்பான விவரங்கள் எதுவும் வெளியாகவில்லை. (ஐ)

## அடுத்தடுத்து தோல்வி; பரம்பரை வியாதியா?

லண்டன் ஜன 22

வாழ்வில் அடுத்தடுத்து சிலர் தோல்விகளையும் இழப்புகளையும் சந்திக்கின்றனர். இத்தகையோருக்கு தோல்வியை ஏற்படுத்தும் பண்புகள் பரம்பரை ரீதியாகக் இடைத்திருக்கலாம் என்று லண்டனில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

சிக்கல்களை தோல்விகளை உருவாக்கிக் கொள்ளும் பண்பு சிலருக்கு பரம்பரை பரம்பரையாக இருந்து வருகிறது. இத்தகையோரின் குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே துரதிர்ஷ்டத்தை சந்திக்க நேரிடுகிறது என்று வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

மனச்சோர்வை உண்டாக்கக் கூடிய இடர்களை தாங்களாகவே உருவாக்கிக் கொள்ளும் பண்பை சிலர் பெற்றுள்ளனர் என்றும் அந்த ஆய்வு கூறுகிறது. (ஐ)

## பணயமாக வைக்கப்பட்ட அரசியல் கைதி விடுதலை

புதுடில்லி, ஜன. 22

இந்தியாவின் வட கிழக்கு மாநிலமான திரிபுராவில் கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் பணயக்கைதியாக வைக்கப்பட்டிருந்த அரசியல்வாதி ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

திரிபுரா மாநிலத்தில் ஆளும் இடதுசாரிக் கூட்டணி அரசியல் வாதியான இவரை தடை செய்யப்பட்ட என். எல். எவ். இயக்கப் போராளிகள் 4 மாதங்களின் முன்னர் கடத்திச் சென்றார்கள்.

இந்திய — பங்களாதேஷ் எல்லையிலுள்ள காட்டுப் பகுதி ஒன்றில் தாம் வைக்கப்பட்டிருந்ததாக அவர் பொலீஸாரிடம் கூறியுள்ளார். இவரது விடுதலைக்காக பணம் எதுவும் கொடுக்கப் பட்டதா என்பது இன்னமும் தெரியவரவில்லை. (இ-9)

## அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

பக்தாத், ஜன. 22

ஆயிரக்கணக்கான ஈராக்கியர்கள் திரண்டு பக்தாத்தில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

அமெரிக்கப்படைகள் ஈராக்கைத் தாக்கினால் அதனை முறியடிக்கப் போவதாக அவர்கள் கோஷமிட்டனர். (ஐ)

# தேர்தலில் பிரியங்கா போட்டியிட மாட்டார்

## பிரசார உரையில் அவரே தெரிவிப்பு

புதுடில்லி, ஜன. 22

இந்தியாவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ராஜீவ்காந்தியின் மகள் பிரியங்கா வாதேரா போட்டியிட மாட்டார் எனத் தெரிவித்துள்ளார்.

ராய்பூர் நகரில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போது அவரே இதனைத் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக திருமதி சோனியா காந்தியும், மகள் பிரியங்கா காந்தியும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றி வருகின்றனர்.

தேர்தலில் பங்குபற்றி முழு அரசியலில் ஈடுபடுமாறு அவர்கள் இருவரையும் காங்கிரஸ் பிரமுகர்கள் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றனர். [ஐ]

## ஈராக் சிறைகளிலுள்ள ஜோர்தானியர் விடுதலை

ஈராக் தனது சிறைகளில் உள்ள ஜோர்தானியக் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யப் போவதாக அறிவித்துள்ளது.

சதாம் ஹுசெய்னுக்கும் முக்கிய ஜோர்தானிய எதிரணித் தலைவர் ஒருவருக்கும் இடையே நடந்த ஒரு சந்திப்பையடுத்து இந்த முடிவுக்கு ஈராக் வந்துள்ளது.

தீர்மானத்துக்கான காரணம் எதுவும் வெளியிடப் படவில்லை.

ஆனால் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஜோர்தான் தலைநகர் அம்மானில் ஓர் ஈராக்கிய மூத்த இராஜதந்திரியும் அவர் மனைவியும் மேலும் ஆறு பேரும் குத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து உடனடியாக இந்த ஏற்பாடு உருவாகியிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

# இந்தோனேசிய நாணயம் ரூபியா நேற்று மிக மோசமான வீழ்ச்சி!

## தாய்லாந்திலும் நெருக்கடியால் மக்கள் கிளர்ச்சி

ஜகார்த்தா, ஜன. 22

கிழக்கு ஆசிய பொருளாதார நெருக்கடியின் மோசமான ஒரு கட்டமாக இந்தோனேசிய நாட்டு நாணயமான ரூபியா நேற்று அதலபாதாளத்துக்கு வீழ்ச்சி கண்டது.

ஜகார்த்தாவில் நேற்றுக் காலை ஒரு டொலர் 12 ஆயிரம் ரூபியாவுக்கு விற்பனையானது.

தங்களது நிதிப் பொறுப்புக்களை நிறைவேற்ற முடியாமற்போகும் என வங்கிகளும், கூட்டுறவு அமைப்புக்களும் அச்சம் கொண்டுள்ளதாலும் —

அரசியல் ரீதியான காரணங்களாலும் இந்த மோசமான நாணயப் பெறுமதிச் சரிவு ஏற்பட்டிருப்பதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்தனர்.

நாட்டின் பல பகுதிகளில் அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால் மக்கள் வன்செயலில் இறங்கும் நிலை உருவாகியுள்ளது

அயல் நாடான தாய்லாந்திலும் மிக மோசமான பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. அங்கு மேற்கொள்ளப்பட்ட சிக்கன நடவடிக்கைகளால் ஆத்திரமுற்ற நூற்றுக்கணக்கான மக்கள் பாங்கொக்கில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

இதற்கிடையில் —

தமது நாட்டுக்கு கூடுதலான நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக தாய்லாந்தின் நிதி அமைச்சர் அமெரிக்க அதிகாரிகளையும், சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளையும் சந்தித்து அவசர பேச்சு வார்த்தைகளை நடத்திவருகிறார். (ஐ)

உலக அரங்கில்

## தி.மு.க. ஆட்சி கலைக்கப்படாது

புதுடில்லி, ஜன. 22

தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தாலும் தி. மு. க. அரசு கலைக்கப்படவாய்ப்பில்லை என்று தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் கருத்துத் தெரிவித்துள்ளார். (இ-9)

## அன்பான வேண்டுகோள்

உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கென ஒப்படைக்கப்படும் விளம்பரங்கள் பலவற்றை இடநெருக்கடி காரணமாக அடுத்த நாள் பதிப்பில் வெளியிட முடியாத நிலை ஏற்படுகின்றது.

இதனைத் தவிர்ப்பதற்கு உதவுமாறு விளம்பரதாரர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அடுத்த நாள் பத்திரிகையில் வெளிவர வேண்டிய விளம்பரங்களை இயன்றவரை முதல் நாள் பி.ப 3 மணிக்கு முன்னர் எமது விளம்பர கரும பீடத்தில் ஒப்படைத்து ஒத்துழையுங்கள்.

முன்கூட்டியே விளம்பரங்களை ஒப்படைத்து இடநெருக்கடியைத் தவிர்த்து அவை தவறாது வெளிவருவதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

உங்கள் ஆதரவுக்கு என்றும் எங்கள் இதய பூர்வமான நன்றிகள்.

விளம்பர முகாமையாளர்.

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பீதியை நீக்கி பாதுகாப்பை நிலை நிறுத்தி
வறுமையை ஒழித்து அபிவிருத்தியை மேற்கொள்ள

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
(புளொட்)



X

விளம்பர இல. (67665)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

20 நாள் நிரம்பிய பிறிமா லைன் பிறவுன் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தேவையானவர்கள் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம். திருநெல்வேலியில் தொடர்பு கொள்ளவும்.

[சி/2670]

இறைச்சிக்கோழி, Finisher மாஸ் என்பன விற்பனைக்குண்டு, மே/பா S. கந்தசாமி, கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை (கானான் ஜெப ஆலயமுன்பாக).

(52766)

கண்ணாடி அலுமாரி, இரும்புக் கதிரை 6, நஷனல் குளிர்சாதனப் பெட்டி, கனன் கமரா, யமகா பி. எஸ். எஸ் 290, ஓர்கன், K. D. K சுவர்மணிக்கூடு... பெண்களின் துவிச்சக்கர வண்டி. தொடர்பு: 15/14A, சங்கிலியன் வீதி, நல்லூர்.

(52778)

சித்திரவயல் அலுக்கை அளவெட்டியில் தென்னந் தோட்டக்காணி 4½ பரப்பு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 403, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயில் அருகில்)

(52777)

### இலகு திருமணசேவை

31 வயது பூரட்டாதி 3 UK இல் விசிதர் வேலை புரியும் மணப்பெண்ணுக்கு UK இல் மணமகன் தேவை. கனடா மணமக்களின் குறிப்புகளும் உண்டு. தொடர்பு: ஞாயிறு காலை, துரை விமலா, யாழ். நாச்சிமார் கோயிலடி.

(52736)

### காணவில்லை

நீண்ட செவிகளையும் பிறவுண் நிற முகத்தையுமுடையதுமான வெள்ளை நிற ஜமுனா பாரி ஆட்டையும், பெரிய குட்டியையும் ஞாயிற்றுக்கிழமை முதல் காணவில்லை. இவற்றைக் கண்டவர்கள் இல. 14, மடம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அறிவிக்கவும்.

[52757]

### உடுபுடவை அன்பளிப்பு

சண்டிலிப்பாய், ஜன. 22

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தில் ஊனமுற்றோர் தின விழா அண்மையில் நடைபெற்ற போது 60 ஊனமுற்றவர்களுக்கு உடுபுடவைகளும், பாயும் வழங்கப்பட்டன. பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் இவற்றை வழங்கினார்.

(ஐ-135)

### தவறிவிட்டது

குணரட்ணம் கருணாகரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (632382035 v), விசேட அடையாள அட்டையும் (091027179) 19-01-98 அன்று யாழ். நகரப் பகுதிக்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 308, கிறிஸ்தேவி சலூன், பலாலி றோட், ஆலடிச்சந்தி, கந்தர்மடம் என்ற முகவரிக்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(52762)

திரு. க. கிறிஸ்ரோபர் ஆகிய எனது முக்கிய ஆவணங்கள் அடங்கிய பிரயாணப்பை கப்பல் பிரயாணத்தின் பின் லொறியிலிருந்து இறக்கும் போது யாழ். பஸ் தரிப்பு நிலையத்தில் கைமாறிவிட்டது. பல்கலைக்கழக அனுமதிப்பத்திரம், O/L, A/L பெறுபேறுகள் அடங்கியBAG. கைமாறி எடுத்தவர்கள் தயவு செய்து ''வித்யா'' நகையகம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும்.

(52772)

உரும்பிராய்க்கும் திருநெல்வேலிக்கும் இடையில் எனது கார்றேடியோ, பூட்டு ஆகியன Bagகுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள், யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சாமுவேல் அன் சன்ஸ் முகாமையாளரிடம் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். மகாலிங்கம், மாதகல்.

(52773)

குருநாதர் கணேசமூர்த்தி என்பவரது தேசிய அடையாள அட்டை (590980447 V), விசேட அடையாள அட்டை, வடமராட்சி அனுமதிப் பத்திரம் ஆகியன முத்திரைச் சந்திக்கும், மூத்தவிநாயகர் கோயிலுக்கும் (காணவாய்) இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர் தயவுசெய்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, 45/4, நாயன்மார் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.

(52779)

### தேவை

பாவித்த கூரைத்தகடுகள் (Galvanised Corrgated) தேவை. விலை விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். R. பாலசுந்தரம், 7, பேரின்பநாயகம் ஒழுங்கை, கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

(52765)

### வினாத்தாள்

புலமைப்பரிசில் 11 ஆவது பயிற்சிவினாத்தாள்கள்விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம். Bond, யாழ்ப்பாணம்.

[52554]

# குருநகர் ஆஸ்பத்திரியில் நோயாளர்கள் அதிகரிப்பு

## வசதிகளை அதிகரிக்கக் கோரிக்கை

திருநெல்வேலி, ஜன. 22

குருநகர் அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வரும் நோயாளர் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளது. தினமும் நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்களுக்கு வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இங்கு நிலவிவரும் இடநெருக்கடியை நீக்குவதற்கும், வெளிநோயாளர் பிரிவை விஸ்தரிப்பதற்கும் தனியானதொரு வெளிநோயாளர் பிரிவுக்கட்டடம் ஒன்று நிறுவப்பட வேண்டும் என்று வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ஆ. திருநாவுக்கரசு உயர் அதிகாரிகளிடம் கோரியுள்ளார்.

இதேவேளை யுத்த அனர்த்தங்களின் போது பலத்த சேதமடைந்த குருநகர் வைத்தியசாலையின் பிரசவ விடுதி கடந்த ஆண்டில் புனரமைப்புச் செய்யப்பட்டது. ஆயினும் இதுவரை அங்கு பிரசவ தாய்மார்கள் பிரசவத்திற்காக அனுமதிக்கப்படாமல் இருந்து வருவதாகவும், பிரசவத் தாய்மார்களை அனுமதித்து பிரசவ விடுதியை மீண்டும் செயற்பட வைக்குமாறும் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் யாழ். சுகாதார சேவை பிரதிமாகாண பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஐ-135)

## குளத்தில் வயோதிபர் சடலம்

நெல்லியடி, ஜன. 22

வீட்டிலிருந்து புறப்பட்ட வயோதிபர் ஒருவர் மூன்று நாள்களின் பின்னர், குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த 17ஆம்திகதி உடுவில் ஆர்க்லேனில் வீட்டிலிருந்து புறப்பட்ட தம்பிப்பிள்ளை இராசரத்தினம் (வயது 73) என்னும் வயோதிபரே ஆனைக்கோட்டை கூழாவடி குளத்திலிருந்து 20 ஆம் திகதி மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது சடலம் நேற்றுக் காலை உறவினர்களினால் யாழ். போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளது..

(ஐ-109)

## சண்டிலிப்பாயில் நாய்களுக்கு தடுப்பூசி

சண்டிலிப்பாய், ஜன. 22

சண்டிலிப்பாய் வடக்கு ஆலங்குழாய் சனசமூக நிலையத்தில் நாளை வெள்ளிக்கிழமையன்று வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி போடப்படவுள்ளது.

மூன்று மாதத்திற்கு மேற்பட்ட வயதுடைய சகல வளர்ப்பு நாய்களுக்கும் காலை 9 மணி தொடக்கம் இங்கு தடுப்பு ஊசி போடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஐ-135]

## பண்ணையாளர்களுக்கு அடுத்த மாதம் முதல் பயிற்சி

நெல்லியடி, ஜன. 22

பருத்தித்துறை, கரவெட்டி, உடுவில், சாவகச்சேரி, கோப்பாய் ஆகிய ஐந்து பிரதேச செயலர் பிரிவிலுமுள்ள அரசாங்க மிருக வைத்தியசாலைகளில், 'கெயர்' நிறுவன அனுசரணையில் பண்ணையாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாண கால்நடை சுகாதாரப் பணிப்பாளரின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் இப் பயிற்சி வகுப்பில் ஆடு, மாடு, கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பண்ணையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென பருத்தித்துறை மிருக வைத்தியசாலை டாக்டர் திருமதி பு. தங்கராசா தெரிவித்துள்ளார்.

(ஐ-109)

## தாவடி - சுதுமலை ஊடாக பஸ் சேவை நடத்தக் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஜன. 22

யாழ். நகரிலிருந்து தாவடி — சுதுமலை ஊடாகச் செல்லும் பஸ்சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு வடபிராந்திய போக்குவரத்துச்சபை கோண்டாவில் சாலை முகாமையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னர் யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து மேற்படி பாதைவீதியாக மானிப்பாய் வரை பஸ் சேவை நடத்தப்பட்டது.

இப்பகுதி மக்களின் பிரயாண வசதி கருதி மீண்டும் இப்பாதை வழியாகப் போக்குவரத்து சேவையை ஆரம்பிக்குமாறும் இப்பகுதியிலுள்ள பொது நல அமைப்புகள் சில வேண்டுகோள் விடுத்துள்ளன.

(ஐ-135)

## கோழிகளுக்கு தூக்க நோய்

நெல்லியடி ஜன 22

உடுப்பிட்டிப் பகுதியில் கோழிகளுக்கு ஒருவித தூக்க நோய் ஏற்பட்டுள்ளமையால் வீடுகளில் வளர்க்கப்படும் பல கோழிகள் இறந்துள்ளன.

(ஐ- 109)


## வாழ்த்துகின்றோம்

இன்று 22 - 01 - 98 சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த

ஏ. சி. எஸ். செல்ல முத்துக்குமாரு

''பவள விழா''வைக்

கொண்டாடுகின்றார்.

இவர் பிரசித்தி பெற்ற நொத்தாரிசும், சத்திய ஆணையாளரும், சத்தியப் பிரமாண மொழிபெயர்ப்பாளரும், சுன்னாகம் வர்த்தக சங்கத் தலைவரும், சமூகத்தொண்டருமாவார். இவ்வேளையில் அன்னாரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

V. S. சிவரட்ணம்
(விலைமதிப்பு உத்தியோகத்தர்),

திருமதி S. சிவரட்ணம்
(சிறிலங்கா காப்புறுதிக் கூட்டுஸ்தாபன முகவர்)

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

(52783)



உ

## திருமண வாழ்த்து

இன்று 22 - 01 - 98 பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில்
வட பழனி முருகன் தேவஸ்தானம் சென்னையில்
தமது இல்லற வாழ்வில் அடியெடுத்து வைக்கும்

திரு. திருமதி சத்தியவான் தம்பதிகளின் புத்திரன்
**பகீரதன் [கண்ணன்]**

திரு. திருமதி கதிர்காமநாதன் தம்பதிகளின் புத்திரி
**இரத்தினகலா**

தம்பதியினரை சகல சௌபாக்கியங்களும் பெற்று இனிதே நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்: திரு. திருமதி சத்தியவான்
சகோதரர்கள்: பார்த்தீபன், மயூரன்
சகோதரிகள்: கலையரசி, கலைவாணி, கல்யாணி,
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

சிவகுலவீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

[52786]



## பரி. யோவான் கல்லூரி
யாழ்ப்பாணம்.

### க. பொ. த. (உயர்தரம்) ஆவணி 2000ஆம் ஆண்டு பரீட்சை வகுப்புக்கான அனுமதி

க. பொ. த. (உயர்தர) வகுப்பு அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை ஆகிய பிரிவுகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்களை எமது காரியாலயத்தில் 22 - 01 - 1998 முதல் 05 - 02 - 1998 வரை மாணவர்கள் பெற்றுக் கொள்ளலாம். அனுமதிக்கான எழுத்துப் பரீட்சை செவ்வாய்க்கிழமை 10 02-1998 காலை 9-30 மணிக்கு எமது பாடசாலையில் நடைபெறும்.

மேலதிக விவரங்களுக்கு பரி. யோவான் கல்லூரி காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்

(சி-2696)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டிசம்பரில் 50 ஆயிரம் பேர் சிகிச்சை

தென்மராட்சி ஜன 22

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளில் கடந்த மாதத்தில் டிசம்பர் மட்டும் சுமார் 50 ஆயிரம் பேர் சிகிச்சைபெற்றதாக புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகிறது.

சாவகச்சேரி, பளை, கொடிகாமம், வரணி, கைதடி ஆகிய ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்றவர்களில் 90 சதவீதமானோர் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# வடக்கு-கிழக்கு இலங்கையுடன் இணைந்திருக்க வேண்டுமா?

## வாக்கெடுப்பு நடத்தக் கோருகிறது ரெலோ

யாழ்ப்பாணம், ஜன. 22

தமிழ் மக்களின் தாயகமான வடக்குக் கிழக்கை இணைக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்த முயலும் அரசு வடக்குக் கிழக்கு இலங்கையுடன் தொடர்ந்தும் இணைந்திருக்க வேண்டுமா இல்லையா என்பது குறித்துக் கருத்தறிய சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த முன்வருமா? ''ரெலோ'' அமைப்பின் முதல்வர் எம். கே. சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

நல்லூர் கைலாசபதி கோயில் முன்றலில் நடந்த ரெலோ அமைப்பின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும்கூறியதாவது:

தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்ட இடத்தில் — தமிழ் மக்களின் ராஜதானியாக விளங்கிய இடத்தில் — எமது பிரசாரத்தை ஆரம்பிக்கின்றோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசு முன்வைத்துள்ள தீர்வு யோசனைகள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பதை உணர்த்தும் வகையில் இத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

வடக்கு—கிழக்கு தமிழ் மக்களின் தாயகம் என்பதை ஏற்காத இந்த தீர்வுயோசனைகளை நாம் முற்று முழுதாக நிராகரிக்கின்றோம்.

வடக்கு—கிழக்கை துண்டாடும் நோக்கில் முன் வைக்கப்படும் சர்ஜன வாக்கெடுப்பை முற்று முழுதாக நிராகரிக்கின்றோம்.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண உண்மையாகவே அரசு விரும்புமானால் உடனே யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும். விடுதலைப் புலிகளுடன் அரசு பேச வேண்டும்; நேரடியாக விடுதலைப் புலிகளுடன் அரசு பேச முன்வராவிட்டால் மூன்றாந் தரப்பு ஒன்றின் மூலம் பேச வேண்டும். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியே இந்தத் தேர்தலில் நாம் போட்டியிடுகின்றோம் என்றார். [ஐ-3]

## கல்லூரிகளுக்கு தொலைபேசி

திருநெல்வேலி, ஜன. 22

யாழ். மத்திய கல்லூரிக்கு விரைவில் தொலைபேசி இணைப்பு வழங்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்லூரி அதிபர் க. இராஜதுரை தெரிவித்தார்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி ஆகியவற்றுக்கும் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-135)

## பளைப் பிரதேசதில் சோளம் பயிர்ச்செய்கை

தென்மராட்சி, ஜன. 22

பளை விவசாய போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு பரீட்சார்த்தமாக பயிரிட இலவசமாக விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சோளம் உற்பத்தி பெருவெற்றியளித்துள்ளது.

தென்னந்தோட்டங்களிலும் மேட்டு நிலப் பயிர்ச்செய்கையிலும் ஊடு பயிராக பயிரிட இப்பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட சோளம் பயிர் பெரு விளைச்சலுடன் அறுவடைக்குத் தயாரான நிலையில் உள்ளதாக பளை விவசாய போதனாசிரியர் தெரிவித்தார்.

பளைப் பகுதியில் உள்ள நூறு விவசாயிகளுக்கு தலா இரண்டு கிலோ சோளன் விதை இலவசமாக வழங்கப்பட்டது.

இதேவேளை கெயர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிலக்கடலை உற்பத்தியும் நல்ல விளைச்சல் கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## இந்துசமய பரீட்சை முடிவு வரவில்லை

கடந்த வருடம் ஜூன் மாதம் நடத்தப்பட்ட இந்து சமய ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை முடிவுகள் இதுவரை வெளியாகவில்லை என இப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் தெரிவித்துள்ளனர். (ஐ-117)

## நகரசபை அலுவலகம் இடமாற்றம்

தென்மராட்சி, ஜன. 22

சாவகச்சேரி டச்சு வீதியில் இயங்கி வந்த சாவகச்சேரி நகரசபை அலுவலகம் கடந்த திங்கட்கிழமை முதல் சாவகச்சேரி — யாழ்ப்பாணம் வீதியில் உள்ள முன்னைய உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாக நகரசபை செயலாளர் மு. செ. சரவணபவ தெரிவித்தார்.

(ஐ-117)

# தமிழர் பிரச்சினை தீர்வதற்கு தேசிய வீரர் சேர். பொன். அருணாசலம் கூறிய வழி இது!

**இலங்கையின் சுதந்திரத்துக்காக அரும்பாடு பட்டவர்களில் — தேசிய வீரர்களில் ஒருவரான சேர். பொன். அருணாசலம் அவர்கள் —**

**ஒரு கட்டத்தில் தமிழர்களுக்குத் தனி அரசே பூரண சுதந்திரம் தரும் என்று கூறினார்.**

**அவரின் 74 ஆவது நினைவு தினம் இம்மாதம் ஒன்பதாம் திகதியாகும்.**

**அரசியல் தந்திரங்கள் போடப்படும் இக்கால கட்டத்தில் பழையவற்றை மீட்டுப் பார்க்கிறது இக்கட்டுரை.**

இலங்கைத் தீவின் சுதந்திர தினப் பொன்விழா இன்னும் ஒரு சில நாள்களில் கொழும்பிலும், கோட்டையிலும் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

இத்தீவு சுதந்திரம் அடைவதற்கு சேர். பொன். அருணாசலம் ஆற்றிய பணிக்கு ஒப்புவமை கூற இயலாது. சிங்கள கனவான்கள் சி. ஈ. கொரியா, ஈ. பி. டி.சில்வா போன்றவர்களே அதற்குச் சான்று பகர்ந்துள்ளனர்.

பல முகங்களிலும் பட்டை தீட்டிய வைரம் போன்று வாழ்வின் பல துறைகளிலும் சுடர்விட்டுப் பிரகாசித்தவர் சேர். பொன். அருணாசலம். இத் தீவின் சுதந்திரத்தின் மீது கொண்ட அவரது தணியாததாபம் தமது மக்களை எதிர் கொள்ள விருந்த ஆபத்துக்களைக் கூட காண விடாது அவரது கண்களைக் குருடாக்கி விட்டது.

அனுபவ ஞானியாகிய மூத்த சகோதரர் சேர். பொன். இராமநாதன் பல்லின மக்கள் வதியும் இந்த ஒற்றையாட்சி அமைப்புக்கு உட்பட்ட தீவில் ஆள்புல பிரதிநிதித்துவத்தால் விளையக் கூடிய தீங்கினை எடுத்துரைத்த போதிலும் புத்தி ஜீவியான அருணாசலம் செவிமடுக்கவில்லை.

''அருணி, அருணி நீ நெருப்போடு விளையாடுகின்றாய்; நடப்பிக்க விரும்புவற்றை நீ அற்பமேனும் அறியாதுள்ளாய்; உன் சொந்தக் காலடியின் கீழே மண்ணை அகழ்கின்றாய் நீ'' என்று சகோதரர் எச்சரித்த போதிலும் இலங்கை தேசிய காங்கிரஸ் அமைப்பைத் தோற்றுவிப்பதற்காக ஆள்புல பிரதிநிதித்துவததுக்கு வக்காலத்து வாங்கியிருந்தார்.

இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைப்பைத் தோற்றுவிக்கும் அங்குரார்ப்பண வரைவுத் தீர்மானம் வலியுறுத்திய ஆள்புல பிரதிநிதித்துவம் குறித்த வாசகத்தை ஆட்சேபித்து தாம் தெரிவித்து வந்த எதிர்ப்பினை தமிழர் மகாசபைத்தலைவர்கள் ஏ. சபாபதியும், சேர். கனகசபையும் பின்னர் கைவிட்டதற்குக் காரணம் சேர். பொன். அருணாசலம் மேற்கொண்ட தலையீடே ஆகும்.

சேர். பொன். அருணாசலம் மேற்கொண்ட கடும் உழைப்பின் பயனே இத்தீவுக்குக் கிடைத்த சுதந்திரம்.சிங்களத் தலைவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை இது. ஆயினும் தீவு விடுதலையடைவது உறுதியானதும் இலங்கைத் தேசிய காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட அருணாசலம் தேர்தல் வந்தபோது தலைநகரில் அவர் வேட்பு மனுத் தாக்கல் செய்வதைத் தடுக்கும் பொருட்டு ஜேம்ஸ்பீரிஸ் அங்கும் முந்திக் கொண்டார். சேனநாயக்கா சகோதரர் இருவருமே அதன் பின்னணியில் செயற்பட்டனர்.

தாம் இலங்கைத் தேசிய சங்கத்தின் தலைவர் என்ற கோதாவில் தந்த அந்த உறுதி மொழி இப்பொழுது இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைப்பின் தலைவர் என்பதால் தம்மைக் கட்டுப்படுத்துகிறது என்றார் ஜேம்ஸ் பீரிஸ்.

**த. திரவியம்**

''அரசியல் காரணங்களின் நிமித்தம் நேர்மையான நல்ல நோக்கத்துடன் ஐக்கியத்தைப் பேணும் பொருட்டாக தனிபபட்ட உறுப்பினர்கள் வடபகுதியைச் சேர்ந்த தனிப்பட்டவர்களுடன் பேரங்கள் நடத்தி உறுதியுரைகள் தந்திருக்கலாம்; அவை குறித்து காங்கிரஸ் அமைப்பு அவை ஒன்றையும் அறிந்திருக்கவில்லை'' என்று எச்.ஜே. சீ. பெரேரா ஆட்சேபம் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

இத்தீவின் ஏனைய எந்த மக்களையும் போலன்றி, சிங்களவர்களைப் போன்றே தமிழ் மக்களும் அவர்களிலேயே ஒரு பெரும்பான்மைச் சமுதாயமே என்பதால், அவர்கள் ஒன்றில் சிறுபான்மையினருடன் ஒரே வகுப்புள் சேர்க்கப்படுவதற்கோ அன்றேல் ஏதும் பாதுகாப்புக்கள் தேவைப்படுபவர்களாக இருப்பதற்கோ எந்த நியாயமும் இடையாது— எனும் சிறந்த அடிப்படை மீது கொழும்பில் வதியும் தமிழர்களுக்கு சேர். பொன். அருணாசலம் வலியுறுத்திய பிரதிநிதித்துவம் அவர்களுக்கு வழங்கப்படுவதற்கு எதிராக தேசாதிபதியிடம் தாம் தெரிவித்த ஆட்சேபனை பயனற்றுப் போனதும், ஐக்கிய இராச்சியத்தின் வெள்ளை மண்டபத்துக்கே, அன்றைய சிங்களத் தலைமை தூது சென்றதும் குறிப்பிடத்தக்கது.

சிங்களத் தலைமையினால் காலைவாரிக் கைவிடப்பட்ட நிலையில் ''காயுமற்ற கறியுமற்ற சாம்பார் நிலைக்கு எனது இனம் தள்ளப்படுவதே தேசியம் எனில் அத் தேசியத்தை நான் வேண்டேன்'' எனத் தெரிவித்து தமது காலில் படிந்த தூசியை உதறிவிட்டவராக இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைப்பில் இருந்து வெளியேறியவர் சேர். பொன். அருணாசலம் அவர்கள்.

அதன் பின்னர் ஐரோப்பியர் வரவால் நீண்ட நானூறு ஆண்டு காலம் மறக்கப்பட்டிருந்த தமிழர் வரலாற்றை கொடியும், கொற்றமும் கொண்டு இறைமையுடன் சுதந்திரமாக அரசோச்சிய தமிழர் அரசு மீளவிக்கப்படுதலே இத்தீவில் தமிழர் பிரச்சினை தீர விடப்பட்டிருக்கும் ஒரே வழி என முரசறைந்திருந்தார்அவர்.

இத் தீவினைத் தமது பொதுவான தாயகமாகக் கொண்டு சிங்களவரும், தமிழரும் ஏனைய மக்களும் சமபங்காளராக ஒரே அரசில் சகவாழ்வு வாழ்தல் சாத்தியம் எனும் சேர். பொன். அருணாசலத்தின் எண்ணத்தில் இடிவிழுந்தது.

ஆயினும் சோர்ந்து போகாத ஒருவராக தமிழ்த் தேசியத்தை அது இத் தீவில் முன்னர் இருந்த உயர்வான ஸ்தானத்துக்கு உயர்த்துவதற்கு தம்மை அவர் அர்ப்பணித்துக் கொண்டார். விதி செய்த சதியால் காலன் இடையில் குறுக்கிட்டுவிட்டான். சேர். பொன் அருணாசலம் கண்ட தமிழ் ஈழத் தரிசனத்தை நிதர்சனமாக்குவதற்கு சிந்தை செல்வா அடியெடுத்துக் கொடுத்தார். அந்த விடுதலைப் பயணத்தில் தங்கு மடங்களுக்கு இடமில்லை எனக் கூறிப் போந்தார் சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை ஐயா.

எதிர்கால வரலாறு என்னவெனப் பகரவுள்ளதோ? காலம்தான் பதிலளிக்க வேண்டும். ★

இனப்பிரச்சினைக்கான தீர்வே மக்கள் ஏக்கம்!
நியாயமான தீர்வே எங்கள் நோக்கம்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) X

[ஏ-0023]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. தே. கவிலிருந்து பிரிந்தோரை மீண்டும் சேர்க்க ரணில் முயற்சி

கொழும்பு, ஜன. 22

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் அக்கட்சியில் சேர்ப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முயற்சித்து வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவி சிறிமானி அத்துலத்முதலியைச் சந்தித்து ரணில் பேச்சு நடத்தி உள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சிறிமானி அத்துலத்முதலியின் இல்லத்தில் இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பேச்சுவார்த்தையில் அரசின் அரசமைப்பு திருத்த யோசனைகள், அதிகாரப் பரவலாக்கல், எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் தேர்தல்கள் ஆகியவை குறித்து ஆராயப்பட்டன.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை மீண்டும் ஐ. தே. கவுடன் இணைப்பது குறித்தும் பேசப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் சஜித் பிரேமதாசாவின் பிறந்த நாள் வைபவத்தில் கலந்து கொண்ட ரணில் முன்னாள் அமைச்சர் சிறிசேன குரேயுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-21)

## 54 பேர் வருகை

யாழ்ப்பாணம், ஜன. 22

வன்னியில் இருந்து 17 குடும்பங்களைச் சேர்ந்த 54 பேர் குருநகர் இறங்குதுறைக்கு நேற்று முன்தினம் வந்து சேர்ந்தனர் ; என்று பலாலி இராணுவ தலைமையக செய்திக் குறிப்பு தெரிவித்தது. (உ-3)

## விவேகானந்தர் விழா

யாழ்ப்பாணம், ஜன. 22

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை காலை விவேகானந்தர் விழா அதிபர் கி. மகேந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-7)

## மினிபஸ் சேவை

தென்மராட்சி, ஜன 22

தென்மராட்சி மினிபஸ் சங்கத்தினர் மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் கோயிலடியில் இருந்து சாவகச்சேரி வரையிலான புதிய மினிபஸ் சேவையினை அடுத்த வாரம் ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்த மினிபஸ் கனகன்புளியடிச்சந்தி, மட்டுவில், பெருங்குளம் ஊடாக சாவகச்சேரி வரை நடத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ-117)

## மேலும் இரு மாணவருக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 22

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை நெறிக்கு மேலும் இருவர் அனுமதிக்கப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எஸ். ரவீந்திரன் (கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்), கே. ஜெயமோகன் (''அபிராமி'', நெல்லியடி, தும்பளை, பருத்தித்துறை) ஆகிய இருவருக்குமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## இராணுவ முகாமின் மின்விநியோகம் துண்டிப்பு

மட்டக்களப்பு, ஜன. 22

மட்டக்களப்பு பேத்தாளை இராணுவ முகாமுக்கு வாழைச்சேனையிலிருந்து செல்லும் மின்விநியோகக்கம்பிகள் இனந்தெரியாதோரால் கடந்த திங்களன்று துண்டிக்கப்பட்டது இதனையடுத்து முகாம் இருளில் மூழ்கியது.

இச்சம்பவத்தின் எதிரொலியாக முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றன.

வீடொன்றில்ஷெல்விழுந்து வெடித்ததில்கணவன்மனைவி உட்பட 3 பேர் காயமடைந்து வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். [உ-21)

# நாயன்மார் குருபூசைகள் மறுமலர்ச்சிக்கு உதவும்

## நாவலர் விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், ஜன. 22

''சைவசமய வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய நாயன்மார்கள், அனுபூதிமான்கள், சான்றோர்களின் குருபூசை தினங்களை கொண்டாடுவது எமது சமயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்.''

இவ்வாறு அண்மையில் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் கொண்டாடப்பட்ட நாவலர் விழாவின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உடுவில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பராநந்தன் தெரிவித்தார்.

ஆரம்பித்து ஓராண்டு நிறைவுறு முன் இரு பாலர் பாடசாலைகளை நிர்வகிப்பது உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரின் நிர்வாகத் திறமைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு — என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது உரையில் —

சைவசமயத்தை நிலைநிறுத்திய பெரியார்களில் போற்றுதற்குரியவர் நாவலர் பெருமான். இப் பெரியாரை நினைவு கூரும் இவ்விழாவிலே பார்வைக் குறைபாடுடைய ஏழைகளுக்கு தர்ம சிந்தையுள்ள நிறுவனங்களின் உதவியுடன் இலவச மூக்குக் கண்ணாடி வழங்குவதற்கு இம் மன்றத்தினர் எடுத்த முயற்சி பாராட்டுக்குரியது'' — என்றார்.

### உதயனின் அன்பளிப்பு

இவ்விழாவின் போது கண் சத்திர சிகிச்சை செய்த 17 பேருக்கு 'உதயன்' நிறுவன ஆதரவுடன் இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

நாவலர் பணிகள் என்ற தலைப்பில் உரைகளும், இசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (அ-8)

# பளைகோட்ட பாடசாலைகளில் தொடரும் ஆசிரியர்பற்றாக்குறை

தென்மராட்சி ஜன 22

பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் வருடாந்த இடமாற்றம் மூலம் ஐந்து ஆசிரியர்களும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு ஏழு ஆசிரியர்களும் செல்வதால் இப் பகுதி மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படையலாமென பெற்றோர் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இப் பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள போதிலும் அவர்களின் இடத்துக்கு வேறு ஆசிரியர்கள் அனுப்பப்படவில்லை.

தற்காலிக இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களிலும் எட்டு ஆசிரியர்கள் இன்னமும் கடமைக்குத் திரும்பவில்லை.

வன்னிப் பகுதியிலிருந்து சொந்த இடங்களுக்கு திரும்பிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் வருகை அதிகரித்துள்ள வேளையில் ஆசிரியர்கள் பற்றாக்குறையினால் மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிப்படையலாம் என அஞ்சப்படுகிறது. (இ-117)

---

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு: 10 — 09 — 1934

உதிர்வு: 23 — 12 — 1997

**திருமதி நாகரத்தினம் செல்வநாயகம்**

திதி: 22-01-98

பெற்று வளர்த்துப் பேணிக் காத்து
உற்ற வாழ்வுக்கான உயர்வு தந்து
பற்றுமிக வைத்த தாயே - உன்னைப்
பற்றியிழுத்தனனே காலன் இங்கு
முற்றும் இழந்தவராய் வாடிநின்று
கொற்றவன் தான் வாழ்வையே சாந்திகொள்வோம்.

இன்று நடைபெறவுள்ள இவரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், நண்பகல் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

முத்தட்டிமடலேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(52426)

---

நெஞ்சில் நீங்கா ஐந்தாண்டு நினைவுக் கருக்கள்



தோற்றம்: 30 — 12 — 1981

மறைவு: 22 — 01 — 1993

**செல்வி கார்த்திகா பத்மநாதன்**

(யா / இடைக்காடு மகாவித்தியாலய மாணவி)

உன் இளமையை விபத்து வந்து தின்றதா?
நம்ப முடியவில்லை.
மலர வேண்டிய மொட்டே!
மலராமல் போனாயோ?
புன்னகை ஓயாத உன்முகம்
எங்கள் நெஞ்சை விட்டு
ஒரு நொடியேனும் மறையவில்லையம்மா!
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
தொலைதூரம் பிரிந்து சென்றாயோ?
உன் ஆத்மசாந்திக்காக இறைவனைக்
கண்ணீருடன் பிரார்த்திக்கின்றோம்.

உன்பிரிவால் துடிக்கும்:
அப்பா, அம்மா, அக்காமார்,
உற்றார், உறவினர்கள்.

முதனாம் கட்டை,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

(52848)

---

யா, சண்டிலிப்பாய் வடக்கு அரசடி

**சித்தி விநாயகர் ஆலயம்**

மேற்படி ஆலயத்தில் 15 - 01 - 98 அன்று நடைபெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் இன்று வரை கோரப்படாத பரிசில்களை 15 - 02 - 98 இக்கு முன்னர் பெற்றுக்கொள்ளும்படி பணிவோடு கேட்டுக் கொள்கின்றோம்.

கோரப்படாத இலக்கங்கள்:

2 ஆம் பரிசு 02321

ஆறுதல் பரிசுகள்

| | | |
|---|---|---|
| 2831 | 286 | 3527 |
| 4358 | 1010 | 1924 |

மு. ஜயந்தி
தலைவர்

(52776)

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 01 — 10 — 1952

மறைவு: 23 — 12 — 1997

**திருமதி இரத்தினசிங்கம் லீலா**

அன்பாய் அரவணைத்து எமை ஆதரித்து வளர்த்தீர்கள் இடைநடுவில் எமைவிட்டு பிரிந்ததினால் உங்கள் நினைவுகள் நித்தம் இதயத்தை வருடுதம்மா!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

— குடும்பத்தினர்

287, விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(52781)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ பீடத்துக்கு தகுதி பெறும் யாழ்.மாணவர் எண்ணிக்கை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன 22

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் 100 மாணவர்களை அனுமதிக்க வசதி இருந்தும் யாழ். மாவட்டத்தில் இருந்து போதிய மாணவர்கள் அனுமதிக்குத் தகுதி பெறாததால் இம்முறை 74 பேருக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

போதியளவு மாணவர்கள் யாழ். மருத்துவ பீடத்துக்கு தகுதி பெறாத காரணத்தால் பல்வைத்தியம், மிருக வைத்தியம், விவசாய விஞ்ஞானம் ஆகிய துறைகளில் ஆக்குறைந்த வெட்டுப்புள்ளி பெற்றவர்களிடம் இருந்து யாழ். மருத்துவ பீடத்துக்கு அனுமதி பெற விண்ணப்பங்கள் கோருவது என்றும் —

கிடைக்கும் விண்ணப்பங்களில் இருந்து தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இதற்கான விண்ணப்பம் யாழ் மாவட்டத்தில் இருந்து மட்டும் கோரப்படாமல் இலங்கை முழுவதிலும் இருந்து கோரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

இவ்வாண்டு மருத்துவ பீடங்களுக்கு மேலும் தலா 10 மாணவர்களைச் சேர்க்குமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மருத்துவ பீடாதிபதிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ். மருத்துவபீடத்திற்குப் போதுமான மருத்துவ மாணவர்களை அனுமதிக்க முடியாதிருப்பதால் அனைத்து மருத்துவ பீடங்களுக்கும் அனுமதிக்கப்படும் மொத்த மருத்துவ மாணவர்களின் எண்ணிக்கை குறையாமல் இருப்பதற்காக யாழ்ப்பாணத்தில் உருவாகும் வெற்றிடங்களை ஏனைய மருத்துவ பீடங்களில் இட்டு நிரப்பலாம் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மருத்துவ பீடத்திற்கு யாழ் மாணவர்களையே அனுமதிக்க வேண்டியிருப்பினும் போதியளவு மாணவர்கள் அங்கு தகுதிபெறாத காரணத்தால் அங்கு வெற்றிடங்கள் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாண்டு களனிப் பல்கலைக்கழகத்திலும் அனுமதி பெறும் மருத்துவ மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது என மானியக் குழுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மருத்துவ பீடங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது உருவாகும் நடைமுறைச் சிக்கலைப் புரிந்து கொள்ள முடியாத பல பெற்றோர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றனர் என மானிய ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிலைமையைத் தவிர்க்கும் நோக்கிலேயே யாழ். மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய மருத்துவ பீடங்களுக்கு மேலும் தலா 10 மருத்துவ மாணவர்களை அனுமதிக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு அனைத்து மருத்துவ பீடங்களிலும் சுமார் ஆயிரம் மருத்துவ மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

(ஐ-10-3)

## பாடசாலை மாணவருக்கு சைவ சமயப் பரீட்சை

வண்ணை - சாந்தையர் மடம், ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகம் கடந்த 44 வருடங்களாகப் பாடசாலை மாணவர்களுக்கு இடையே சைவ சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு நடத்தி வரும் சைவசமய அறிவுப் பரீட்சையையும், மாலைகட்டுதல், கோலம் போடுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயன்முறைப் போட்டியையும் இவ்வருடமும் நடத்தவுள்ளது.

சைவசமய அறிவுப்பரீட்சை ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 13 வரையிலான மாணவர்களுக்கும், செயன்முறைப்போட்டி சகலரும் பங்கு பற்றக்கூடிய விதத்திலும் ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது.

சைவசமய அறிவுப்பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி 8 ஆம், 10, திகதிகளிலும் —

செயன்முறைப் போட்டி எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதியும் நடைபெறும்.

இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 25 01.1998 ஞாயிற்றுக்கிழமை ஆகும். பரீட்சையிலும், போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். பங்குபற்ற விரும்புவோர் 362, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## கொப்பிகள் அன்பளிப்பு

மானிப்பாய், ஜன. 22

மானிப்பாயிலுள்ள சத்திய சாயிசேவா சமித்தியினர் ஏழாயிரம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளை, நவாலி மகாவித்தியாலய மாணவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு; பொதுமக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 22

கனடாவிலும், அமெரிக்காவிலும் கப்பல்களில் உயர் சம்பளத்திற்கு வேலை வாய்ப்புள்ளதாக இலங்கையில் சில நிறுவனங்கள் பத்திரிகைகளில் விளம்பரங்களைப் பிரசுரித்துள்ளன. அவை சட்டத்திற்கும், விதிமுறைக்கும் உடன்படாததால் மோசடிகள் இடம்பெற சந்தர்ப்பங்கள் உள்ளன. பொதுமக்கள் இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேற்கண்டவாறு மக்களை அறிவுறுத்தியுள்ளது. (ஐ 8)

## 300 விவசாயிகளுக்கு மரக்கறிவிதை வழங்கல்

தென்மராட்சி, ஜன. 22

பனை விவசாய போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 300 முழுநேர விவசாயிகளுக்கு வழங்கவென உலக உணவு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்குரிய விதைவகைகள் பனை விவசாயத் திணைக்களத்தினால் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

மேட்டு நிலப்பயிர்ச் செய்கைக்குரிய கத்தரி, தக்காளி, பயிற்றை, வெண்டி, புடோல் ஆகிய விதை இனங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாக விவசாயப் போதனாசிரியர் தெரிவித்தார்.

உலக உணவு நிறுவனத்தினரால் மண்வெட்டி வழங்கப்பட்ட முழுநேர விவசாயிகளுக்கே இந்த விதைகள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## 40 ஆவது ஆண்டு விழா

அச்சுவேலி, ஜன. 22

அச்சுவேலி தோப்பு சனசமூக நிலையத்தின் 40 ஆவது ஆண்டு விழாவும் புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை நிலையத்தலைவர் க. கனகராசா தலைமையில் நடைபெறும். விழாவில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் கலந்து கொள்கின்றார்.

(ஐ-11)

## வெட்டுப்புள்ளியும் யாழ். மாணவரும்

பல்கலைக்கழகக் கல்வியாண்டு 1997 - 98 -க்கான வெட்டுப்புள்ளிகள் 15—1—98 இல் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டது. இதன் மூலம் யாழ். மாணவர்கள் ஒரு வகையில் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்றே கூறவேண்டும்.

உதாரணமாக, மருத்துவத்தை எடுத்துக் கொண்டால் அதற்கான வெட்டுப்புள்ளி யாழ். மாவட்டத்திற்கு 275 ஆகும். கொழும்புடன் ஒப்பிடும்போது இது குறைவு போன்ற ஒரு மாயை ஏற்படும். ஆனால் உண்மை அதுவல்ல.

1995 - 96 கல்வியாண்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 63 - க்கும் மேற்பட்ட மாணவர்கள் மருத்துவத்திற்கு தெரிவானார்கள். ஆனால் தற்போதோ அதனை விடவும் குறைந்த எண்ணிக்கையான யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களே தெரிவாகுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான காரணம் இம்முறை யாழ். மாவட்டத்திலிருந்து திறமை அடிப்படையில் தகுதி பெற்றவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதேயாகும்.

இவ் வெட்டுப்புள்ளிக்குரிய 1996 ஆம் ஆண்டுப் பரீட்சார்த்திகள் தான் இடம்பெயர்ந்து 8 மாதங்களுக்கு மேலாக படிப்பே இல்லாது இருந்தவர்கள். அவ்வேளை பரீட்சை எழுதியவர்கள் பூரணமாகக் கல்வி பயிலாத நிலையிலும், பல கஷ்டங்களின் மத்தியிலும் படித்து பரீட்சை எழுதியவர்கள். எனவே இவர்களையும் ஏனைய மாவட்ட மாணவருடன் ஒரே தரத்தில் வைத்து நோக்கலாகாது.

1996 ஆம் ஆண்டுப் பரீட்சார்த்திகளை வேறு தரத்தில் மனிதாபிமானத்துடன் பார்க்கவேண்டியது அவசியம். இவர்களது திறமைக்கு மதிப்பளிக்க வேண்டும். இத்தகைய ஒரு நிலை கொழும்பு மாவட்டத்துக்கோ அல்லது வேறு தென்னிலங்கை மாவட்டத்துக்கோ ஏற்பட்டிருப்பின் இவ்வாறான நிலை ஏற்பட்டால் என்ன முடிவு நடக்கும். நிச்சயமாக நிவாரண ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும்.

அது மட்டுமல்ல யாழ். மாவட்டத்தில் இருந்து மற்றெல்லா ஆண்டுகளிலும் கணிசமான எண்ணிக்கையுள்ள மாணவர்களே மருத்துவத்திற்குத் தகுதி பெற்றிருக்கிறார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பின்தங்கிய மாவட்டம் என பிரகடனம் செய்வதால் ஆக ஒரே ஓர் இடம்தான் அதிகமாக யாழ்ப்பாணத்திற்கு கிடைக்கிறது. அது ஒரு பம்மாத்து எனலாம்.

எனவே 97 - 98 ஆம் கல்வியாண்டிற்குரிய வெட்டுப்புள்ளி நிர்ணயம் 1996 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து மிகவும் கஷ்டப்பட்டு பரீட்சை எடுத்த யாழ். மாவட்ட மாணவர்களுக்கு செய்யப்பட்ட பெரும் அநீதியாகும்.

இந்த அநீதியைத் தகுந்த முறையில் உரத்த குரலில் நாடாளுமன்றம், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, கல்வி அமைச்சு, என்பவற்றுக்கு எடுத்துக் கூறினால் நிச்சயம் பலன் கிடைக்கும் என நம்புகிறோம். முதலில் நிர்ணயிக்கப்பட்ட வெட்டுப்புள்ளி பின்னர் குறைக்கப்பட்டதும் உண்டு. 1991, 92ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற விசேட பரீட்சைகளிலும் தமிழ்மாணவர்கள் பாதிப்படைந்தனர். அவ்வாறான நிலை இம்முறை ஏற்படக்கூடாது.

தரப்படுத்தல் பிரச்சினை தமிழர்களின் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறுவதற்கான முக்கிய காரணிகளில் ஒன்று என்பதனை மறந்துவிட முடியாது. இதனை உடனே கவனத்தில் எடுத்து தகுந்த நடவடிக்கை எடுத்து இடம் கிடைக்கும் எனும் நம்பிக்கையால் 2 ஆம் தடவைகூட பரீட்சை எடுக்காத இவ் 96 ஆம் வருட மாணவர்களை விரக்தியில் இருந்து காப்பாற்ற வேண்டும். செய்வார்களா?

அரசாங்கத்தை இது குறித்து கவனம் கொள்ளச் செய்வது கல்விச் சமூகத்தின் கடமையாகும்.

பாதிக்கப்பட்ட மாணவி.

யாழ்ப்பாணம்.

# சிறந்த சிவாச்சாரியர்கள் உருவாக குருகுலம் நிறுவிப் பணியாற்றியவர்

## சஷ்டியப்த பூர்த்தி விழாவில் பாராட்டு

நல்லூர், ஜன. 22

சிவாச்சாரியர்களோடு இணைந்து பணியாற்றி அவர்களுக்குப் பெருமை தேடித் தந்ததுடன், தர்மசாஸ்தா குருகுலத்தின் மூலம் பிராமணச் சிறார்கள் வேதாகமங்கள் கற்று சிறந்த சிவாச்சாரியர்களாக உருவாகவும் தொண்டாற்றியவர் சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்.

தர்மசாஸ்தா குருகுல முதல்வர் மகாதேவக் குருக்களின் சஷ்டியப்த பூர்த்தி விழாவில் பேசிய யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் இவ்வாறு கூறினார்.

இந்துக் குருமார் ஒன்றியத்தின் சார்பில் அதன் தலைவர் சிவஸ்ரீ எஸ். மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் மேற்படி விழா அண்மையில் நடைபெற்றது.

பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

சமூகத்தில் அந்தணர்கள் சிறந்தவர்களாக, பெருமைக்குரியவர்களாக வாழ வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த அவர் வாழ்க்கையை எமது சமய நெறிகளுக்கமைய வாழ்ந்து காட்டியதுடன் சமூகப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

எமது சமய பாரம்பரியத்தையும், கிரியைப் பாரம்பரியத்தையும் அந்தணச் சிறார்கள் கற்றுத் தேறக் காரணமாக தர்மசாஸ்தா குருகுலத்தை நடத்திவரும் அவரிடம் பயின்ற பலர் இன்று வெளிநாடுகளில் கூட சிறந்த சிவாச்சாரியர்களாக பணி செய்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆலயங்களில் எழக் கூடிய பிரச்சினைகளைச் சுமுகமான முறையில் தீர்வு காண அவரின் ஆற்றல் பயன்படுத்தப்படுவது அனைவரும் அறிந்தஒன்று —எனச் சொன்னார்.

இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் தமது தலைமையுரையில்—

சிறுவயதில் சிறந்த குருமாரிடம் தனது கல்வியை ஆரம்பித்த குருக்கள் அவர்கள், தான் கற்ற கல்வியின் பயனை அந்தணச் சிறுவர்களும் பெற்று எதிர்காலத்தில் எமது சமூகத்தின் பெருமைக்குரியவர்களாக விளங்க வேண்டும் என்ற சிந்தையுடன் கடந்த முப்பது வருடங்களுக்கு முன் தர்மசாஸ்தா குருகுலத்தை ஆரம்பித்து திறம்பட இயக்கி வருகின்றார்—

இங்குள்ள ஆலயங்களில் உற்சவங்கள் நடைபெறும் போதெல்லாம் மகாதேவக் குருக்கள் அவற்றில் கலந்து கொண்டு உற்சவங்கள் சிறப்புடன் நடைபெற ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார். அவரது பணி அந்தணர் சமூகத்திற்கு தொடர்ந்தும் கிடைக்க இறைவன் அருள் புரிவான்— என்றார்.

சிவஸ்ரீ மகாதேவக் குருக்கள் தமது பதில் உரையில்—

எனக்கு அளிக்கப்பட்ட இந்தக் கௌரவம் எனது குருமார்களுக்கே உரியது. குருவை வணங்குவது நமது நல்வாழ்வுக்கு இன்றியமையாதது என்பதை இளந்தலைமுறையினர் மனதிருத்தல் வேண்டும். அதுவே உங்களுக்கு உயர்வு தரும் — என்றார்.

சிவஸ்ரீ அ. சர்வேஸ்வரக் குருக்களும் உரையாற்றினார்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், மாணவர்கள் மகாதேவக் குருக்கள் தம்பதியினருக்கு தங்கப் பதக்கம், பொன்னாடை, மலர்மாலைகள் சூடிக் கௌரவித்தனர்.

முன்னதாக நீராவியடி விநாயகர் ஆலயத்தில் இருந்து மகாதேவக் குருக்கள் தம்பதியினர் ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

விழாவில் சிவஸ்ரீ அ. சர்வேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ [illegible] சண்முகநாதக் குருக்கள் உட்பட பலர் பேசினர்.

(அ-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புக்கும், கண்டிக்கும் செல்ல கனரக வாகனங்களுக்குத் தடை

கொழும்பு, ஜன. 22

இம்மாதம் 28 ஆம் திகதியிலிருந்து அடுத்த மாதம் 7 ஆம் திகதிவரை கொழும்பு மற்றும் கண்டி நகருக்குள் கனரக வாகனங்கள் வருவதைத் தடைசெய்வது என அரசு தீர்மானித்துள்ளது.

சுதந்திர தினப்பொன் விழாக் கொண்டாட்டங்கள் தொடர்பான பாதுகாப்பு ஒழுங்குகளைக் கவனிக்கும் குழுவின் சிபாரிசை ஏற்றே அரசு இந்த முடிவை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கால எல்லைக்குள் கண்டி, கொழும்பு நகரங்களின் பல பகுதிகள் அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக்கப்படும் எனவும், நியாயமான காரணங்களின்றி அப்பகுதிக்குள் நுழைய எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திர தினப்பொன் விழாக் கொண்டாட்டங்களைப் புலிகள் குழப்பலாம் என்ற சந்தேகத்திலேயே இவ்வாறான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 2 வாரங்களுக்கு கொழும்பு நகருக்குள் லொறிகள் வருவதைத் தடைசெய்வதால் பாதுகாப்புகள் மேம்பட வாய்ப்புகள் உண்டாயினும் கொழும்பு நகரில் உணவுப் பொருள்களின் விலை அதிகரிக்கும் எனவும் அதனால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்படையும் எனவும் மாநகரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் — என்று 'திவயின' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (ஐ-10)

## வத்தளைப் பகுதியில் ரவைகள் மீட்பு

கொழும்பு, ஜன. 22

வத்தளையில் தெலங்கபாத என்ற இடத்தில் குப்பை சேர்ந்த மேட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5.56 மி மீ ரகத்தைச் சேர்ந்த 141 ரவைகளை வத்தளைப் பொலீசார் கைப்பற்றியுள்ளனர்.

விடுதலைப் புலிகளால் வட பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இந்த ரவைகள் முதலில் ஒரு வீட்டில் வைக்கப்பட்டிருந்தன எனவும் பின்னர் அவை குப்பை மேட்டில் மறைத்து வைக்கப்பட்டுள்ளது எனவும் பொலீசார் நம்புகின்றனர்.

வத்தளைப் பகுதியில் சந்தேகத்திற்கு இடமான வீடுகள் அடிக்கடி பொலீசாரால் சோதனை இடப்படுவதால் இந்த ரவைகளை குப்பை மேட்டில் மறைத்து வைத்திருக்கலாம் எனப் பொலீசார் சந்தேகிக்கின்றனர்.

குப்பை மேட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த ரவைகளை முதலில் வத்தளை நகரசபை ஊழியர் ஒருவரே கண்டுள்ளார். பொலீசாருக்கு அவர் அளித்த தகவலைத் தொடர்ந்தே இந்த ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த 12 ஆம் திகதி இந்த ரவைகள் கண்டு பிடிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பான விசாரணைகள் பாதிக்கும் என்பதால் தகவல்கள் உடன் வெளியிடப்படவில்லை எனத் தெரியவருகிறது. (ஐ-30)

## பளையில் இவ்வாண்டு அன்னாசிச் செய்கை

தென்மராட்சி, ஜன. 22

பளைப் பிரதேசத்து மண் அன்னாசிச் செய்கைக்கு உகந்தது எனக் கண்டறியப்பட்டதையடுத்து இந்த ஆண்டு பல இடங்களில் அன்னாசிப் பயிரை பயிரிட விவசாயத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கென அன்னாசி நாற்றுக்கள் தென்னிலங்கையில் இருந்து எடுத்துவரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-117)

## 70 பொதிகளில் தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர்த் தபால்கள் அடங்கிய 70 தபாற் பொதிகள் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

அவற்றில் உள்ள கடிதங்கள் இன்று முதல் தரம்பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுமென யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை—

குடா நாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூருக்கான கடிதங்கள் அடங்கிய 18 தபாற் பொதிகள் இங்கிருந்து கொழும்புக்கு கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டன. (ஐ- 7)

## வீதி திருத்த வைத்திருந்த தார் பரல் திருட்டு

நவாலி, ஜன. 22

ஆனைக்கோட்டையில் வீதி திருத்துவதற்காக வைக்கப்பட்டிருந்த தார் பீப்பா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திருடப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக திருத்தப்படாமலிருந்த நவாலி, ஆனைக்கோட்டை வீதி தற்போது திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கென வீதியில் வைக்கப்பட்டிருந்த தார் நிரம்பிய பீப்பாக்களிலொன்றே திருடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நவாலி இராணுவ முகாமில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-100)

## கடற்படையிடம் பிடிபட்ட இருவர் மன்னார் பொலீஸ் நிலையத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 22

கடந்த 5 ஆம் திகதி மன்னார் கடற் பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்கள் தற்போது மன்னார் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மன்னார் மாவட்டச் செயலகம் யாழ். செயலகத்துக்கு அறிவித்துள்ளது.

12/10 மத்தியூஸ் றோட் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துரைராசா நிகால் டன்ஸ்ரன், கிராஞ்சி சிவபுரம் பூநகரியைச்சேர்ந்த செல்லையா சத்தியராஜா ஆகிய இருவருமே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இவர்கள் பற்றிய மேலதிக விவரங்களை அறிய விரும்புவோர் இன்று யாழ். செயலகத்தில் பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தரைச் சந்திக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## சமய சந்நிதியில்

கொழும்புத்துறை, ஜன. 22

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் ஆ. சிவநாதன் ''ஆலயந்தானும் அரனெனத் தொழுமே'' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை உடுப்பிட்டி இளைப்பாறிய தபாலதிபர் க. சிவக்கொழுந்து நிகழ்த்துவார். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, பாண்டியன் தாழ்வு அருள்மிகு ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தில் தினசரி மாலை 4.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை நாடு நலம் பெற, மக்கள் மனநிம்மதியுடன் வாழ இறை ஆசி வேண்டி கா. கணேசதாசன் தலைமையில் பஜனை, கூட்டுப்பிரார்த்தனைகள் நடைபெற்று வருகின்றன. (ஐ-30)

## விண்ணப்ப திகதியை நீடிக்கக் கோரிக்கை

நல்லூர், ஜன. 22

வடஇலங்கை சங்கீத சபையின் சங்கீதப் பரீட்சைக்கான முடிவு திகதியை எதிர்வரும் 30.1.98 வெள்ளிக்கிழமை வரை நீடிக்குமாறு யாழ்ப்பாணம் இந்து இளைஞர் பேரவை கேட்டுள்ளது.

தபாலகங்களில் பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகளைப் பெறுவதில் சிரமங்கள் இருப்பதால் விண்ணப்பதாரிகளின் நலனை முன்னிட்டு விண்ணப்பங்களுக்கான முடிவு திகதியை நீடிக்குமாறு கோரப்பட்டுள்ளது. விண்ணப்பம் ஏற்கும் முடிவு நாள் கடந்த 14 ஆம் திகதி புதன்கிழமை என அறிவிக்கப்பட்டிருந்தது. (ஐ-103)

## செய்திச் சாரம்

### ஆரம்ப சுகாதார நிலையம்

சாவகச்சேரி, ஜன. 22

தென்மராட்சிப் பகுதியில் சுகாதாரத் திணைக்கள அனுசரணையுடன் மந்துவில் கிராமத்திலும், உசன் கந்தசாமி கோயில் பகுதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. (இ-31-5)

### மல்லாகத்தில் 34 குடிசைகள் அமைப்பு

சண்டிலிப்பாய், ஜன. 22

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள தையிட்டி, மயிலிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்குவதற்காக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 34 குடிசைகளை மல்லாகம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைத்துள்ளது. (ஐ-135)

### ஓய்வூதியருக்கு நிலுவை

தென்மராட்சிப் பிரதேச ஓய்வூதியர்களுக்கான 5 சதவீத ஓய்வூதிய அதிகரிப்பு இம்மாத ஓய்வூதியத்துடன் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அண்மையில் அறிவிக்கப்பட்ட 18 மாதத்திற்குரிய வாழ்க்கைச் செலவுப்படி நிலுவையான 4 ஆயிரத்து 680 ரூபாவும் ஒரு தொகுதியினருக்கு வழங்கப்பட்டுள்ளது. (ஐ-117)

### கைத்தொழில் பயிற்சி ஆசிரியர்

பளைப் பிரதேச செயலகத்திற்கு கைத்தொழில் பயிற்சி ஆசிரியை ஒருவர் மாகாண கைத்தொழில் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனவரி முதலாம் திகதி முதல் செயற்படுமாறு மயில்வாகனம் புஷ்பவதி என்பவரே கைத்தொழில் பயிற்சி ஆசிரியையாக நியமிக்கப்பட்டுள்ளவராவார். (ஐ-117)

### கணனிப் பிரிவுக்கு கட்டடம்

சண்டிலிப்பாய், ஜன. 22

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் கணனி பிரிவுக்கான கட்டடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. தற்போது ஓய்வூதியம் வழங்குவது தொடர்பான பணிகள் உட்பட சில பணிகள் அங்கு கணனி மூலமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-135)

### நாய்கள் தொல்லை

அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரி பெண்கள் வார்ட் பகுதியில் இரண்டு கதவுகள் இல்லாததால் அங்கு உட்புகும் கட்டாக்காலி நாய்கள் நோயாளிகளுக்கு தொல்லை கொடுக்கின்றன. (ஐ-109)

### கட்டட திறப்பு விழா

அளவெட்டி - மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மறுசீரமைக்கப்பட்ட கட்டடத்தின் திறப்புவிழா கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றது.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் பிரதம விருந்தினராகப் பங்குபற்றினார்.

இக் கட்டடம் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டது. (ஐ-30)

### நிவாரணம் விநியோகம்

நெல்லியடி, ஜன. 22

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மீனவர்களுக்கான 17 ஆம் கட்ட நிவாரணத்தை வழங்கி வருகின்றது.

இதேவேளை இடம்பெயர்ந்தவர்களுக்கான 58 ஏ, பி, 59 ஏ, பி புள்ளிகளுக்கும் நிவாரணம் வழங்கப்படுகின்றது. இந்நிவாரணத்தில் கூடுதலான அளவு நாட்டரிசியும் வழங்கப்படுமென பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வி. சேதுநாயகம் தெரிவித்துள்ளார். (ஐ-109)

### வீசேட முற்பணம்

திருநெல்வேலி, ஜன. 22

யாழ். சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா விசேட முற்பணம் அடுத்த மாதம் வழங்கப்படவுள்ளது. இந்த முற்பணத்தை பெறுபவர்கள் ஆறரை சதவீத வட்டியுடன் பத்துமாத காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். (ஐ-135)

### சம்பள நிதி வங்கிகளுக்கு

நவாலி, ஜன. 22

உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களின் கடந்த 1995 ஆம் ஆண்டுக்குரிய சம்பளம் யாழ். செயலக நிதிப் பிரிவினால் அந்தந்த வங்கிகளுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-100)

### இராச வீதி ஊடாக பஸ் சேவை

அச்சுவேலி, ஜன. 22

அச்சுவேலியில் இருந்து இராசவீதி ஊடாக யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு அச்சுவேலி தாப்பு சனசமூக நிலையத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் போக்குவரத்துச் சபையின் பஸ்சேவைகள் தற்போது வழமைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதால் இராச வீதி ஊடான பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-11)

### ச.சமூக நிலையம் இயங்குகிறது

கொழும்புத்துறை, ஜன. 22

பண்டத்தரிப்பு அன்னை வேளாங்கண்ணி சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டுள்ளது. புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து அது தற்போது இயங்கி வருகிறது. (ஐ-30)

### மீனை வெளியில் விற்கத்தடை

கொழும்புத்துறை, ஜன. 22

நாவற்குழிப் பகுதியைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலாளர்கள் தாம் பிடிக்கும் மீனை வெளிஇடங்களுக்குக்கொண்டு சென்று விற்பனை செய்ய முடியாது எனத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி இப்பகுதி மீன்பிடித் தொழிலாளர்கள் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (ஐ-30)

### பொன்மனைப் பரிசு

திருநெல்வேலி, ஜன. 22

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் பொன்மனைத் திட்டத்தில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளரான திருமதி யோகவாரீஸ்ரா யோகாஸ் என்பவருக்கு பொன்மனைத்திட்ட தேசிய பரிசுச் சீட்டிழுப்பில் 10 ஆயிரம்ரூபா பரிசு கிடைத்துள்ளது. இலங்கை வங்கி யாழ். மாவட்ட முகாமையாளர் கே. பாலசுப்பிரமணியம் கடந்த வாரம் இதற்கான காசோலையை அவரிடம் வழங்கினார். (ஐ-135)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அகதிகள் போடுதடிகளா?

வவுனியா நகரில் உள்ள அகதி முகாம்களை (நலன்நோம்பு நிலையங்களை) தூரத்தே வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், சைவப் பிரகாச மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் வளவுகளில் இயங்கும் அகதி முகாம்களே நகருக்கு அப்பால் மாற்றப்படவுள்ளன.

பாதுகாப்புக் காரணங்களைக் கருதியே இந்த இடமாற்றத்துக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது

அகதி முகாம்களை மூடுவது அல்லது இடம் மாற்றுவது ஆகிய முடிவுகள் அதிகாரிகளைப் பொறுத்தது அகதிகளை — இடம் பெயர்ந்தவர்களை பொறுத்தளவில் முகாம்கள் எங்கிருந்தாலும் ஒன்றுதான். அவை திறந்த சிறைச்சாலைகள்; மக்கள் கைதிகள் என்ற நிலையில் மாற்றம் உண்டாகப் போவதில்லை.

இடம் பெயர்ந்தவர்களாக, தாம் கஷ்டப்படாமல் வாழக்கூடிய இடங்களுக்கு, உறவினர்களுடன் சேர்ந்து வாழலாம் என்று நம்பி வன்னியில் இருந்து வவுனியாவுக்குச் சென்றவர்கள் இப்போது நரகலோக வாழ்க்கையைவிட மோசமான கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்து வருகிறார்கள்

நடமாடும் சுதந்திரம் இன்றி, உழைக்கும் சுதந்திரம் இன்றி, போதிய உணவு, கல்வி வசதிகள் இன்றி இந்த முகாம்களில் இடம்பெயர்ந்த மக்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். அகதி முகாம்களை இடம்மாற்றுவது என்பது சிறைக்கூடங்களை மாற்றுவது என்பதே ஆகும்.

வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள ஒன்பது அகதி முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மாதக் கணக்காகத் தமது ''விடுதலை''க்காகக் காத்திருக்கிறார்கள்.

அது குறித்துக் கவனம் எடுக்கப்படுவதற்கான தெளிவான அறிகுறிகள் எதனையும் காண முடியவில்லை. அவர்களின் விவகாரம் குறித்து ஆராய்வதற்கென்று குழுக்கள், கூட்டங்களுக்குக் குறைவில்லை.

அவர்கள் முறைக்கு முறை தாம் இடம்பெயர்ந்த தமிழ் மக்களே என்று நிரூபிக்கும் ஆவணங்களைச் சமர்ப்பித்தும் எதுவித பயனுமில்லை. ஆவணங்களைச் சமர்ப்பித்து அலுத்துப்போன நிலையில் தங்களுக்கு விடுதலை கிடைக்காதா, விடிவு கிடைக்காதா என்ற ஏக்கத்துடன் அவர்கள் நாள்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

நகரில் உள்ள அகதி முகாம்களை இடம் மாற்றும் முடிவு பாதுகாப்புப் பிரிவினருக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை தவிர்ப்பதற்கான, குறைப்பதற்கான ஒழுங்கே அன்றி மக்கள் நலன் கருதியது அல்ல.

தமிழர்களின் வாழ்க்கை நலன்கள் மனிதாபிமான ரீதியிலேனும் கவனிக்கப்படுவதில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்; கண்டிக்கப்பட வேண்டியதும் ஆகும்.

அகதி முகாம்களில் இருந்து ''விடுதலை'' பெறுவதிலேயே இந்தளவு சிரமமும், சிக்கலும், தாமதமும், அவலமும் என்றால் —

தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை எவ்வாறு உருவாகும்?

தமிழர்களுக்கென ஒரு தன்னாட்சி அரசு இருந்தால் அவர்கள் இவ்வாறு ''போடுதடி'' களாகவா நடத்தப்படுவார்கள்? அவர்களது பிரச்சினைகளில் உடனடிக் கவனமும் நடவடிக்கையும் இருக்காதா? மாற்றான் தாய் சொந்தத் தாய்க்கு நிகராக முடியாது!

# யாழ். பல்கலை அனுமதிக்கான வெட்டுப்புள்ளி குறைக்கவேண்டும்

### ஜனாதிபதியிடம் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 22

குடாநாட்டில் இடம்பெற்ற இடம்பெயர்வு காரணமாக மாணவர்கள் கல்வி பெறமுடியாத சூழ்நிலையில் நடைபெற்ற பரீட்சையின் இருந்தே இம்முறை யாழ். பல்கலைக் கழகத்துக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இதன் காரணமாக போதிய மாணவர்கள் அனுமதி பெற முடியாத நிலை ஏற்பட்டது.

ஆகவே யாழ்ப்பாணத்தின் அப்போது நிலவிய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு யாழ். பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகளைக் குறைக்க வேண்டும்.

மேற்கண்டவாறு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

வெட்டுப்புள்ளியை மாற்றி அமைப்பதன் மூலம் கூடுதலான மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கமுடியும் என்றும்—

இதனால் யாழ். பல்கலைக் கழகத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பக் கூடிய நிலை ஏற்படும் என்றும் — அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கல்வி, உயர்கல்வி அமைச்சருக்கும் இக்கடிதத்தின் பிரதி அனுப்பப்பட்டுள்ளது.

(இ-3)

## எம். பிக்களின் கல்வித் தகைமை குறித்த பிரேரணை

கொழும்பு, ஜன. 22

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு இருக்க வேண்டிய ஆகக் குறைந்த கல்வித் தகைமை மற்றும் ஆகக் கூடிய வயதெல்லையை நிர்ணயிக்கக் கோரும் பிரேரணை ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

இந்தப் பிரேரணையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் குறைந்தது ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் எனவும், ஆகக் கூடியதாக 70 வயதுக்குட்பட்டிருக்க வேண்டும் எனவும் நிர்ணயிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அமைச்சராக பதவி வகிப்பவர் குறைந்தது ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் எனத் தீர்மானிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனிநபர் பிரேரணையாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தப் பிரேரணை அடுத்த மாதமளவில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-10)

## 594 பயணிகளுடன் லங்காமுடித்த வந்தது

யாழ்ப்பாணம், ஜன. 22

திருகோணமலையிலிருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறை வந்து சேர்ந்த லங்காமுடித்த கப்பலில் 594 பிரயாணிகள் யாழ். வந்து சேர்ந்தனர்.

இவர்களில் 262 பயணிகள் வன்னி முதலிய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்று மீள் குடியமர்வதற்காக யாழ். வந்து சேர்ந்தனர். 332 பயணிகள் கொழும்பு முதலிய இடங்களுக்குத் தமது சொந்த விடயம் காரணமாகச் சென்று திரும்பியவர்களாவர். இவ்வாறு திரும்பியவர்களில் 55 பேர் பல்கலைக்கழக மாணவர்கள்.

அதேசமயம் 'லங்கா முடித்த' கப்பலில் உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பயன்படுத்தப்படுவதற்கான ஒருதொகுதி ஜீப்புகளும் பஸ்களும் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளன.

(இ-7)

## மத்திய கல்லூரிக்கு மூன்று மாடிக்கட்டடம்

திருநெல்வேலி, ஜன 22

யாழ். மத்திய கல்லூரியில் மூன்று மாடிகளைக்கொண்ட கட்டடம் ஒன்றை புதிதாக நிறுவுவதற்கு திருகோணமலையிலுள்ள வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. 60 இலட்சம் ரூபா செலவில் இந்த மாடிக்கட்டடம் நிறுவப்படவிருப்பதாகவும் நூல் நிலையம், உயர்வகுப்புமாணவருக்கான 12 வகுப்பறைகள், ஆரம்பக் கல்விப்பிரிவுக்கான 8 வகுப்பறைகள் என்பன அக்கட்டடத்தில் அமைக்கப்படவிருப்பதாகவும் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

## சிப்பாய் செலுத்திய லொறி அரச மரத்துடன் மோதியது

### மாவிட்டபுரத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 22

தெல்லிப்பளைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே பொருள்களை ஏற்றி இறக்குவதில் ஈடுபட்டிருந்த லொறி ஒன்று கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில் அரச மரமொன்றுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

பொருள்களை ஏற்றி இறக்குவதற்காக லொறிகள் அணி அணியாகச் சென்ற வேளையில் இராணுவ வீரர் ஒருவர் லொறி ஒன்றைச் செலுத்திய போதே இந்த விபத்து நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

லொறிச் சாரதியான அப்புகாமி ஜெயசேனா (வயது58) என்பவர் படுகாயமடைந்து பலாலி ஆஸ்பத்திரியிலும் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

லொறியைச் செலுத்திச் சென்ற இராணுவ வீரரும் சிறுகாயங்களுக்கு உள்ளானார்.

இவ்விபத்துக் குறித்து காங்கேசன்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

(இ-7)

## தென்மராட்சி கழகங்களிடையே விளையாட்டுப் போட்டிகள்

தென்மராட்சி, ஜன. 22

தென்மராட்சிப் பிரதேசத்தில் நாவற்குழியிலிருந்து மீசாலை புத்தூர்ச்சந்தி வரையிலான பகுதிகளில் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கிரிக்கட், உதைபந்தாட்டம், கரபந்தாட்டம் ஆகிய சுற்றுப் போட்டிகள் அடுத்த மாதம் சாவகச்சேரியில் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ள விளையாட்டு அணிகளின் தலைவர்கள் உப தலைவர்களுக்கான அறிவுறுத்தல் கருத்தரங்கு எதிர் வரும் திங்கட்கிழமை தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

இச் சுற்றுப் போட்டிக்கான ஏற்பாடுகளை 521 ஆவது படையணியின் சாவகச்சேரி பிரிவு சிவில் நிர்வாக அதிகாரி மேற்கொண்டு வருகிறார்.

(ஐ-117)

## தீக்காயத்துக்கு உள்ளானவர் நேற்று மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 22

லாம்பு வெடித்து தீ பரவியதால் தீக்காயங்களுக்கு உள்ளானவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

சரசாலைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இந்த தீ விபத்து இடம்பெற்றது தெரிந்ததே.

இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரியான குமாரவேலு பரராஜசேகரம் என்பவரே மரணமடைந்தவர் ஆவார்.

எரிந்து கொண்டிருந்த அரிக்கன் லாம்புக்கு மண்ணெண்ணெய் என்று நினைத்து பெற்றோலை விட்டபோது லாம்பு வெடித்து தீப்பற்றியதால் இவர் காயம் அடைந்தது தெரிந்ததே.

இவரது சடலம் விசாரணையின் பின்னர் உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

(இ)

### தேர்தல் நடந்தால்

# வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படுவர் என எவரும் அஞ்சத்தேவை இல்லை

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 22

தேர்தல் நடந்தால் எமது மக்கள் வெளிநாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று அநாவசியமாக அஞ்சத் தேவையில்லை.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை முழு விவரம் வருமாறு:-

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் மூலம் யாழ்ப்பாணத்தில் சிவில் வாழ்க்கை திரும்பினால், வெளிநாடுகளில் அகதிகளாகி இருக்கும் தமிழ் மக்கள் மீண்டும் இங்கு அனுப்பப்படலாம் என ராஜதந்திர வட்டாரங்கள் கருதுவதாக வந்த செய்தியானது, மக்கள் மத்தியில் குழப்பங்களை உருவாக்கியுள்ளது

யாழ்ப்பாண மக்கள், தமது பிள்ளைகள், சகோதரர்களின் வெளிநாட்டுப்பணத்திலேயே [illegible] நடத்தி வரு[illegible] உண்மையே. தேர்தல் நடந்து சிவில் நிர்வாகம் ஏற்பட்டால் தமது பிள்ளைகள் திருப்பி அனுப்பப்பட்டுவிடுவார்கள் என்ற தேவையற்ற அச்ச நிலை ஒன்று மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு முதல் கிழக்கு மாகாணத்திலும், வவுனியா, திருமலையிலும், தேர்தல்கள் நடந்து, சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் எந்த நாடும் அம்மக்களைத் திருப்பி அனுப்பவில்லை. அது மாத்திரமல்லாமல், வடக்கு கிழக்கில் முழுமையான தீர்வொன்று ஏற்படும் வரை அகதிகளாகச் சென்ற மக்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என எதிர்பார்ப்பதற்கில்லை. எந்த நாடும் அகதிகளைத் திருப்பி அனுப்புமுன் தமது உத்தியோகத்தர்களை அனுப்பி இங்குள்ள நிலைமைகளை அறிவது வழமை. இதே போல் முன்னர் பல தடவைகள் வந்த வெளிநாட்டு உத்தியோகத்தர்கள், இங்கு நிலைமை சாதகமில்லை [illegible] தனால் அவர்கள் எமது மக்களை திருப்பி அனுப்புவதைக் கைவிட்டனர்.

எனவே தேர்தல் நடந்தால் எமது மக்கள் வெளிநாட்டில் இருந்து திருப்பி அனுப்பப்படுவார்கள் என அநாவசியமாக அச்சப்படத் தேவையில்லை.

அதே சமயம் இங்குள்ள மக்களுக்கு ஓர் அமைதியான சமாதானமான சூழல் தேவை. சிவில் நிர்வாகம் ஒன்று உருவாக்கப்படுவதன் மூலம் மக்களுக்கு ஏற்படும் அன்றாடப் பிரச்சினைகள் சிலவற்றைக் களையலாம். எனவே மக்கள் அச்சப்படாமல் தேர்தலில் வாக்களிக்கும்படி ஈ. பி. ஆர். எல் எவ். கோருகின்றது. நூறு பேர் வாக்களித்தாலும் கூடப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படத்தான் போகின்றார்கள். எனவே நீங்கள் விரும்பியவர்களைத் தெரிவு செய்ய வேண்டுமாயின், நீங்கள் உங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டுமெனவும் நாம் கூறுகின்றோம். இது தொடர்பாக சகல தூதுவராலயங்களுக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். கடிதங்களையும் எழுதியுள்ளது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## நாளை

தை 10

வெள்ளிக்கிழமை

திதி: தசமி

பிற்பகல் 2.55 வரை.

நட்சத்திரம்: அனுஷம்

வைகறை 4.52 வரை.

சுபநேரம்: 6 36 8.06

ராகுகாலம்: 11.06-12.36

(பகலுக்கும் இரவுக்கும் உரிய நேரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலியில் நேற்று நடந்த முதலாவது ஆட்டத்தில் யாழ். அணி தோல்வி

காலி, ஜன. 22

யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிக்கும், காலி மாவட்ட கிரிக்கெட் அணிக்கும் காலி கிரிக்கெட் மைதான புற்றரை ஆடுகளத்தில் நேற்று நடந்த ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி 118 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

தென்பகுதி சென்றுள்ள யாழ். அணி பங்குபற்றிய முதலாவது ஆட்டம் இதுவாகும்.

பூவா? தலையா? பார்த்ததில் வெற்றி பெற்ற காலி அணி முதலில் துடுப்பெடுத்து ஆடத்தொடங்கியது.

காலி அணி 35 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 275 ஓட்டங்களைப் பெற்றது.

காலி அணியைச் சேர்ந்த ஆர். கருணசேன 67 ஓட்டங்களையும், தம்மிக சுதர்சன 86 ஓட்டங்களையும், யு. குமார 81 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ். அணியைச் சேர்ந்த சுதேஷ்குமார் எட்டு ஓவர்களில் 44 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பி. சஞ்சீவ் 7 ஓவர்களில் 64 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் ரி. அருணோதயம் ஆறு ஓவர்களில் 43 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்கள்.

எம். தயாளன் ஆறு ஓவர்களில் 62 ஓட்டங்களையும், வி. கே. அரசரத்தினம் ஆறு ஓவர்களில் 43 ஓட்டங்களையும் கொடுத்தனராயினும் விக்கெட் எதையும் கைப்பற்றவில்லை.

அடுத்து ஆடத்தொடங்கிய யாழ். அணியின் 17 வயது இளம் ஆட்டக்காரர்களான எஸ். கார்த்திக், ரி. கௌரிபாகன் ஆகியோர் வெகு நிதானமாக 60 ஓட்டங்களுக்கு இணைந்து ஆடினார்கள்.

அதன்பின் யாழ் அணியின் வீரர்களின் கவனயீனமான விளையாட்டால் அடுத்தடுத்து விக்கெட்டுகள் சரிந்தன.

85 ஆவது ஓவரில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 157 ஓட்டங்களை யாழ் அணி பெற்றது.

இதில் எஸ். கார்த்திக் 18 ஓட்டங்களையும், ரி. கௌரிபாகன் 31 ஓட்டங்களையும், கே. சசிகரன் 25 ஓட்டங்களையும், எஸ். சுதேசியன் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

காலி அணி தரப்பில் எம். டி. சில்வா ஏழு ஓவர்களில் 16 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், வி. லக்மாற 5 ஓவர்களில் ஏழு ஓட்டங்களுக்கு இரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இன்று மாத்தறை விளையாட்டு மைதானத்தில் மாத்தறை மாவட்ட கிரிக்கெட் அணியுடன் ஐம்பது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் ஆட்டத்தில் யாழ். அணி மோதும்.

இன்றைய ஆட்டத்தில் பங்குபற்றும் அணியை யாழ். மாவட்ட கிரிக்கெட் தேர்வுக் குழுப்பிரதிநிதிகள் நேற்றிரவு அறிவித்தனர்.

வீரர்கள் விவரம் வருமாறு:

- ★ எம். எஸ். தயாளன் (அணித்தலைவர்).
- ★ எஸ். சுதேசியன் (உபதலைவர்)
- ★ ரி. கௌரிபாகன்
- ★ எஸ். கார்த்திக்
- ★ வி. சஞ்சீவ்
- ★ என். சிவராஜா
- ★ கே. சசிகரன்
- ★ என். சுதேஷ்குமார்
- ★ ஆர். சாஜகான்
- ★ கே. வரப்பிரதன்
- ★ வி. சுபாஸ்கரன்

மேலதிக வீரர்கள்

- ★ தி. அரவிந்தன்
- ★ கே. சீராளன்
- ★ ஏ. எஸ். நிசாந்தன்

## விடுவிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்)

- ★ ஜெயநீதன் — சாவகச்சேரி
- ★ அந்தோனி — இராசலிங்கம் வீதி, திருநகர் யாழ்ப்பாணம்
- ★ ஜீவராஜ் — இராசலிங்கம் வீதி, திருநகர், யாழ்ப்பாணம்.
- ★ லோகேந்திரன் — மூத்தவிநாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை
- ★ சந்திரமோகன் — முள்ளி வீதி, அரியாலை
- ★ சத்தியசிறி[illegible] — இணுவில் வடக்கு, இணுவில்
- ★ வெஸ்லிராஜ் கண்ணா — கச்சேரியடி, யாழ்ப்பாணம்
- ★ அலெக்ஸ்சாண்டர் — குருநகர், யாழ்ப்பாணம்.

## அதிரடி...

(முதலாம் பக்கத் தொடர்)

ஒன்றும், சயனைட் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகவும் — படை வட்டாரங்கள் தெரிவித்தன.

அங்கு நடந்த மோதலில் அகப்பட்டு பெண் ஒருவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-21-3)

## இறுதிக்...

(முதலாம் பக்கத் தொடர்)

அவற்றை உறவினர்களிடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஈ. பி. டி. பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட அவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறு கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் — கடந்த ஞாயிற்றுக்கிழமை பெருமாள் கோயிலடியில் சுட்டுக்கொல்லப்பட்டவர் அப்பாவி என்றும் —

அவரது குடும்பத்துக்கு நஷ்ட ஈடு வழங்குமாறு கோரியுள்ளதாகவும் — ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-3)


## மனமாரப் பாராட்டுகின்றோம்

வசதிகள் அற்ற பின்தங்கிய பிரதேசமாகக் கணிக்கப்படும் நெடுந்தீவின் மகாவித்தியாலய மாணவி

**செல்வி யோகேஸ்வரன் அபிராமி**

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்திலேயே சிறந்த சித்தி பெற்று முதலாம் இடத்தைப் பிடித்து நெடுந்தீவுக்குப் பெருமை தேடித்தந்த அன்னாரையும், அவரை வழிநடத்தும் அவரின் பெற்றோரையும், அவரை உருவாக்கும் பாடசாலையையும் மனமாரப் பாராட்டி, இறையாசீர் வேண்டி நிற்கின்றோம்.

அருட் திரு. இரா. தூசைநாதன்
நல்லாயன் நிலையம்,
யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி. (52797)

## A/L 99, 2000

பௌதிகவியல் [வெப்பவியல் HEAT]

ஆசிரியர்: T. சம்பந்தன்

ஆரம்பம்: 23 - 01 - 98 வெள்ளி 4. 30

**நிரு ரியூசன் சென்ரர்**

கோண்டாவில்.

[52780]

## நேரமாற்றம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும் ''சத்தியவான் சாவித்திரி இசை நாடகம்'' 24 — 01 — 98 சனிக்கிழமை கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

**நேரத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது பிற்பகல் 2.00 மணி என்பதைக் கவனத்தில் கொள்க.**

நுழைவுச் சீட்டுக்களை மண்டப வாயிலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரவேசம் ரூ. 20/- ரூ. 50/-

- தமிழ்மன்றம்
யா/ பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

(52785)

## தவறிவிட்டது

சு. மதிவதனா என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (756880853V), விசேட அடையாள அட்டையும் (091021342) மற்றும் பல்கலைக்கழக அடையாள அட்டை, பாஸ் ஆகியவை கல்வியங்காடு எரிபொருள் நிலையத்துக்கு அருகில் கைப்பையுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

ச. தணிகாசலம் (J. P.)
528, பலாலி றோட்,
திருநெல்வேலி. (52796)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி இந்திரலோஜினி உமாகாந்தனின்
அன்புக் கணவர்

**பொன்னம்பலம் உமாகாந்தன்** அவர்களின்

திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
யாழ்ப்பாணம். (52791)

எமது வீடியோ CD வெளியீடுகள்!

- ♥ கல்யாண வைபோகம்
- ♥ ராமன் அப்துல்லா (புதியது)
- ♥ மண் வாசனை
- ♥ காதல் ஓவியம்
- ♥ அஞ்சலி
- ♥ ரட்சகன் (புதியது)

ஓடியோ CD வெளியீடுகள்

- ♥ சொர்ணமுகி
- ♥ நாம் இருவர் நமக்கு இருவர்
- ♥ பொன் மனம்
- ♥ கண்டக்டர் மாப்ளே
- ♥ கபடி கபடி
- ♥ காதல் சோகப் பாடல்கள்

எம்மிடம் புதிய, பழைய ஓடியோ CD க்கள் விற்பனைக்கு உண்டு.

**சுப்பஸோ வீடியோ யாழ்ப்பாணம்.**

(சி/2700)

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

### வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் 1998

அன்பான வேண்டுகோள்!

**24—01—98** சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மேற்படி சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ள யாழ். வணிகர் கழக வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்திற்கு சகல வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்களும் தயவு செய்து தமது வர்த்தக நிலையங்களை பூட்டி தவறாது கூட்டத்திற்கு சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**24—01—98** சனிக்கிழமை கடைகள் யாவும் பூட்டப்படுமாதலால் பொதுமக்கள் முன்கூட்டியே பொருள்களை வாங்கிக் கொள்ளும்படி தயவாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

19, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். (சி/2697)

## மரண அறிவித்தல்

### இராமுப்பிள்ளை தில்லையம்பலம்

[ஸ்தாபகர்.
[பிள்ளையார் ஸ்ரோஸ், மல்லாவி, யோகபுரம்]

காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், புதுறோட்டை வதிவிடமாகவும் கொண்டு தற்போது மல்லாவியில் வசித்தவருமான இராமுப்பிள்ளை தில்லையம்பலம் 20-01-98 இல் மல்லாவியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை பாக்கியத்தின் சிரேஷ்ட புதல்வரும், நல்லம்மாவின் அன்புக் கணவரும், கமலாம்பிகை, இடபாரூடன் (பிள்ளையார் அரிசி ஆலை, மல்லாவி), தர்மலிங்கம் (பிள்ளையார் களஞ்சியம், மல்லாவி), அருளாம்பிகை, அன்னபாக்கியம், சோதிலிங்கம் (பிள்ளையார் வண்ணச்சோலை, மல்லாவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஏகாம்பரம் (புடைவை வியாபாரம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (முன்னாள் உரிமையாளர், பாலா றேட்ஸ், ஒட்டிசுட்டான்), சிவபாதசுந்தரம் (அனுசியா குறோசரி, கொழும்பு), புவனேஸ்வரி, சறோஜினிதேவி, லலிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், சின்னத்தம்பி, காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, சோமசுந்தரம், இராசையா, சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23-01-98 வெள்ளிக்கிழமை மல்லாவியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. ஏகாம்பரம் (மருமகன்)

No. 40, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (52801)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் [illegible] 22-01-98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org